[illegible] 1924-25

வால்யூம் ௫ சஞ்சிகை

JL
Rbம211, N11VD
M25.15.8.
186751

Regd: No. M. 916.

OFFICE OF ... MADRA[S]
9-JUL 1925

THE VEDANTA DIPIKA

வேதாந்த தீபிகை.

குரோதனஸூ,
1924—1925.
ஸம்புடம் 15.

வைகாசிமீ.
MAY
ஸஞ்சிகை 8.

பத்ராதிபர். }
கார்யதர்சி. }
ர. ஸ்ரீநிவாஸராகவ
அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.

1. பத்ராதிபரின் குறிப்புகள்:— 177
2. பழைய பெரியோர்கள்:—ஸ்ரீ. உப. ஸ்ரீசைல தாதாசார்யர். 182
3. உபயவேதாந்த ஐககண்ட்யம்:—
ஸ்ரீ. உப. தேசிகவரதாசார்யர். 193
4. ஸ்ரீராமாவதார காரணம்:—
கருடபுரம் ஸ்ரீ. உப. தி. க. திருமலாசார்யர். 196
5. ஸ்ரீபாஷ்யகாரரின் திருநக்ஷத்ரம்:—பத்ராதிபர். 198
6. இரண்டாந்திருவந்தாதி:—
ஸ்ரீ. உப. வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர். 201
7. ஸ்ரீபரமபத ஸோபாநம் (வ்யாக்யானத்துடன்):—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 25

Office:—2/11, Adiappa Mudaly Street, Purasawalkam.
K. R. Press, Madras.

[வ]ர்ஷச் சந்தா ரு. 3—0—0.]

உலக ப்ரசித்தி பெற்றது.

"டிக் - டாக்" | கடியாரம் விலை, | **ரூ. 3.**

ஜெர்மனி தேசத்தில் செய்யப்பட்டது. மிக்க அழகாயுள்ளது. சுவற்றில் மாட்டக்கூடியது. காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது. விலை குறைவு. பலமதிகம். இன்றைக்கே எழுதுங்கள்.

"டிக் - டாக்"

கடியாரம் 1 - க்கு விலை ரூ. 3.

(ரிஜிஸ்டர்ட்)

விலாசம்:— பீடர் வாச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 27.

மதராஸ்.

ச்ருதப்ரகாசிகா ஸஹிதம், ஸ்ரீபாஷ்யம் தமிழ்மொழி பெயர்ப்பு.

முதல் ஸஞ்சிகை (லகுஸித்தாந்தம் முடிய)	ரூ.	...	1	4	0
2-வது மஹா பூர்வபக்ஷம் முடிய		...	0	10	0
3-வது ஜிஜ்ஞாஸாதிகரணம்		...	0	12	0
ஸ்ரீ வசநபூஷண ப்ரமாணத்திரட்டு அரும்பத விளக்கம்		...	1	4	0
திருவாய்மொழி ஈட்டின் ப்ரமாணத்திரட்டு முதல் 3-பத்து		...	0	12	0

திருப்புறம்பியம் போஸ்டு,
கும்பகோணம்.

T. D. ராமஸ்வாமி நாயுடு.

BRAHMINS!!

Do you know that you have a journal to speak for you?

It is

THE "BRAHMAN"

Published *twice* a month in *English* at Triplicane, Madras

WITH

An Annual Subscription of only Rs. 2-8-0. Sample copy As. 2.

N. B. The profit of this journal goes to *Brahmana Gurukulas* to be ³ by the Editor.

Will you Kindly support it?

Manager.

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ ஐய்யங்கார், எம். ஏ.
கார்யதர்சி }

ஸம்புடம் 15.] குரோதன ஷு, வைகாசிமீ. [ஸஞ்சிகை 8.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா॥

[ஸ்ரீபாகவதம். 1-9-28.]

ஸ்ரீ:

பத்ராதிபரின் குறிப்புகள்.

வைகானஸர்களின் உத்பத்தி.

தற்காலத்தில் பகவத் ஸந்நிதிகளில் ஆராதனம் பாஞ்சராத்ரம் வைகானஸம் என்று இருவிதமாக நடந்துவருகிறது. பாஞ்சராத்ர விதியைப்பற்றி அனேக க்ரந்தங்கள் அச்சிடப்பட்டு இருக்கின்றன. வைகானஸ விதியைப்பற்றி க்ரந்தங்கள் ஓலைச்சுவடிகளில் இருக்கின்றனவே தவிர அச்சிடப்பட்டு இருக்கிறவைகள் மிகவும் ஸ்வல்பம். மரீசி மஹரிஷியால் செய்யப்பட்ட ஆனந்த ஸம்ஹிதையில் வைகானஸர்களுடைய உத்பத்தி அவர்களுடைய பெருமை இவைகள் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறபடியால் அது தீபிகாபிமானிகளுக்கு உபயோகமாகுமென்று நினைத்து அந்த க்ரந்தத்தின் ஸங்க்ரஹம் பின் வருமாறு எழுதப்படுகிறது.

வைகானஸ சாஸ்த்ரம் யஜுர் வேதத்தில் ஒரு பாகமென்றும் அதில் ஐந்து காண்டங்களும் 59 - சாகைகளும் உள்ளதென்றும் ஆநந்த ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

பகவான் லோகோஜ்ஜீவனார்த்தமாக பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி என்கிற அவதாரங்களை யெடுத்தும் ஜனங்கள் அதிக ப்ரயோஜனப்படுக்

திக்கொள்ளாமல் வீணாய்ப் போவதைக் கண்டு துக்கித்து மிகவும் கிருபையுடன் அர்ச்சாவதாரம் செய்து லோக ஸம்ரக்ஷணம் செய்வதாகவும் அப்படிச் செய்யும்பொழுது தன்னை ஆராதனம் செய்வதற்கு தகுந்த மனுஷ்யனை ஸ்ருஷ்டிக்கவேண்டுமென்று ப்ருஹ்மாவுக்கு கட்டளையிட்டார். அவரும் மிகவும் யோஜித்து பிறகு (விசேஷ வநராக ஜாதஃ) ஒரு மஹருஷியை ஸ்ருஷ்டித்தார். விசேஷமாய் கனனம் செய்து அதாவது ஆராய்ச்சி செய்து ஸ்ருஷ்டி செய்ததால் அவருக்கு வைகானஸர் என்று பெயர் வந்தது.

ப்ருஹ்மா இவரை ஸ்ருஷ்டித்து பகவானிடத்தில் இவரை ஸ்ருஷ்டித்ததாகத் தெரிவித்தார். பகவானும் உடனே விகனஸ ருஷியைப்பார்த்து நீரும், உம்முடைய ஸந்ததியாரும் என்னை ஆராதித்து வரவேண்டும். நீர் யஜுர்வேதத்தில் ஒருபாகமான வைகானஸ ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட 18 - ஸம்ஸ்காரங்கள் 22 - யக்ஞங்கள் அடங்கிய வைகானஸ ஸூத்ரப்படி நித்ய கர்மானுஷ்டானம் செய்துவரவேண்டும். நீங்கள் என்னுடைய ஆராதனத்திற்காகவே ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறபடியால் நீங்கள் கர்ப்ப ஸ்ரீ வைஷ்ணவர்கள். உங்களுக்கு சங்குசக்ராங்கனம் வேண்டியதில்லை. கர்ப்ப சக்ரம், ந்யாஸ சக்ரம், பாஹ்ய சக்ரம் என்று சொல்லப்பட்ட 3-வித சக்ரங்களில் கர்ப்ப சக்ரத்தால் பரிசுத்தம் பண்ணப்பட்டவர்கள். இப்படி பரிசுத்தம் பண்ணும் ஸம்ஸ்காரத்துக்கு விஷ்ணுபலி என்று பெயர். பத்னி கர்ப்பமான எட்டாவது மாஸம் சில ஸம்ஸ்காரங்களை செய்து ஹவிஸ்ஸை பழுக்க காய்ச்சப்பட்ட சக்ரத்தினால், அங்கனம் செய்து அந்த ஹவிஸ்ஸை பத்னியை சாப்பிடும்படி செய்யவேண்டும். பிள்ளை பிறந்த பிறகு மறுபடி இதே கர்மாவை செய்து ஹவிஸ்ஸை காய்ச்சப்பட்ட சக்ரத்தினால் அங்கனம் செய்து, அதை, சிசுவை சாப்பிடும்படி செய்யவேண்டும். இந்த கர்மாவுக்கும் விஷ்ணுபலி என்று பெயர்.

இந்த விஷ்ணுபலியால் அந்தக் குழந்தைக்கு கர்பத்திலிருந்தே ஸ்ரீ வைஷ்ணவத்வம் ஸித்தித்து விடுகிறது. இப்படிப்பட்ட வைகானஸர்கள் என்னை ஆராதிக்கவேண்டும். வேறு எந்த ஸூத்ரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் சங்கு சக்ராங்கனம் இல்லாமல் என்னை ஆராதனம் செய்யக்கூடாது. வைகானஸர்கள் சங்கு சக்ராங்கனம் செய்துகொள்ளக்கூடாது. அப்படி அவர்கள் செய்துகொண்டால் என்னுடைய ஆலயத்திலும் நுழையக்கூடாது, பூஜை செய்யவும் கூடாது. வைகானஸன் கையினால் எவனொருவன் சங்கு சக்ராங்கனம் செய்யப்படுகிறானோ அவன் மஹா பரிசுத்தியை அடைகிறான். அவனுக்கு நான்குவித புருஷார்த்தங்களும் ஸித்திக்கும். அவர்களுக்கு தேவலகன் என்கிற தோஷம் கிடையாது. பகவா

னுடைய நகத்திலிருந்து உண்டானவர்களாகையினால் நீங்கள் மஹா பரிசுத்தர்கள். தேவலகர்கள், கல்ப்ப தேவலகர்கள், கர்ம தேவலகர்கள், சுத்த தேவலகர்கள் என்று மூன்றுவகைபட்டவர்கள். சாப்பாடு, கீர்த்தி இவைகளுக்கு ஆசைபட்டு ஆலயார்ச்சையை பூஜை செய்கிறவர்கள் கல்ப்ப தேவலர்கள். ஆசாரியரிடமிருந்து தெரிந்துகொள்ளாமல் தாங்களாகவே ஆராதனம் பண்ணுகிறவர்கள் கர்ம தேவலகர்கள் என்றும், தீக்ஷை இல்லாமல் மூன்று வருஷங்கள் கோவிலில் ஆராதனம் செய்கிறவர்கள் சுத்த தேவலகர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தோஷம் உங்களுக்கு ஸம்பவிக்காது, என்று சொல்லி என்னை நீர் ஆராதித்துவாரும் என்று சொல்லிவிட்டு பகவான் போய்விட்டார். அதுமுதல் அவரும் அவருக்கு பிறகு அவர் வம்சத்தார்களும் பகவானை ஆராதனம் செய்துவருகிறார்கள்.

வைகானஸர்களுடைய பெருமை.

வைகான்ஸருடைய பெருமையை குறிக்கும் பின்வரும் வ்ருத்தாந்தமானது சுகபகவானுக்கு மரீசி மஹருஷியால் சொல்லப்பட்டது. அதாவது— முன்னொருகாலத்தில் ஒரு பகவத் ஸந்நிதியில் விஷ்ணுவானவர் தேவலர் என்பவரால் ஆராதிக்கப்பட்டு வந்தார். அப்பொழுது வைகானஸ குலத்தில் பிறந்த குழந்தையானது தன் தாயாரால் கோவிலில் ஆராதனத்திற்காக அனுப்பப்பட்டது. குழந்தையை பார்த்து எல்லோரும் குழந்தையானதால் உள்ளே வரக்கூடாது என்று நிறுத்திவிட்டார்கள். அன்று ராத்திரி பெருமாள் தேவலருக்கு என்னை ஆராதனம் பண்ணுவதற்கு உனக்கு அதிகாரம் இல்லை. அந்த குழந்தைதான் ஆராதனம் செய்யவேண்டும் என்று ஸ்வப்னம் ஸாதித்தார். அப்படி ஸாதித்தும் கேளாமல் பூஜை செய்வதற்கு கோவிலுக்குப்போனார்கள். கோவில் கதவை திறக்கப் போகும்பொழுது அதை திறக்கமுடியவில்லை. என்ன உபாயம் செய்தபோதிலும் கதவை திறக்கமுடியவில்லை. அந்த ஊர் ராஜாவும் வந்து திறக்க முடியாமல் கடைசியாய் அந்தக் குழந்தையை கொண்டு திறக்கும்படி செய்ய, கதவும் திறந்துகொண்டது. குழந்தையும் கையில் நைவேத்யத்தை வைத்துக்கொண்டு, அப்பா சாப்பிடும், சாப்பிடும், என்று சொன்னவுடன் பகவான் சங்குசக்ரகதாபாணியாய், பீதாம்பரத்துடன் கிழவராக முன்வந்து நின்று, 'நான் சாப்பிட்டுவிட்டேன், இனி வைகானஸர்களை தவிற தேவலர் முதலானவர் என்னை ஆராதனம் செய்தால் நான் இந்த பூமியைவிட்டு விலகி விடுவேன். என்னையும், வைகானஸர்களையும் எவன் தூஷிக்கிறானோ அவன் ரௌரவாதி நரகத்தை அடைவான்' என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டார்—என்று.

வைகானஸர்களால் ஆராதிக்கப்படாத திவ்யமங்கள விக்ரஹத்தை எவன் ஸேவிக்கிறானோ அவனுக்கு ப்ராயச்சித்தம் செய்யவேண்டும். அந்

தப் ப்ராயச்சித்தமானது— இப்படி ஸேவித்த ஒருவன் காலையில் ஸ்நாநம் செய்துவிட்டு நல்ல குலத்தில் பிறந்த, வேத சாஸ்த்ரார்த்தங்கள் தெரிந்த ஆசாரசீலர்களாய் இருக்கிற பெரியோர்களுடைய உத்திரவைப் பெற்று மண்ணினாலாவது, தங்கத்தினாலாவது, கல்லினாலாவது விஷ்ணுவினுடைய ப்ரதிமையைச் செய்து துளஸி முதலிய புஷ்பங்களால் பூஜை செய்து அர்க்ய பாத்ய ஆசமனீயங்களை ஸமர்ப்பித்து, மறுபடி ஸ்நானம் செய்து த்வாதசாக்ஷர மந்திரத்தால் 128 - தடவை ஹோமம் செய்து 100 - தடவை ஜபித்து **'அணோரணீயாந்'** என்கிற மந்திரத்தையும் புருஷ ஸூக்தத்தையும் ஜபித்து ம்ருத்திகாஸ்நானம் செய்து தன் சக்திக்குத் தகுந்தபடி ப்ராஹ்மணர்களுக்கு போஜனம் செய்துவைக்கவேண்டும். பிறகு ஸந்நிதிக்குப் போய் "வைகானஸர் இல்லாத ஒருவரால் பூஜை செய்யப்பட்ட ஒரு விஷ்ணுவை நான் ஸேவித்தேன். அந்த பாபத்தை நீர் பொறுத்துக்கொள்ளும்" என்று மன்னிப்புகேட்டுக் கொள்ளவேண்டும். மேலே குறிக்கப்பட்ட விஷயங்களால் வைகானஸர்களுடைய பெருமை இவ்வளவு என்று நன்றாய் விளங்குகிறது.

பிறகு வைகானஸ சாகையைச் சேர்ந்த 18-ஸூத்ரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த வைகானஸர்கள் அவர்கள் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட விதிப்படி நித்யகர்மானுஷ்டானங்களை செய்துவரவேண்டும்.

பிறகு சங்குசக்ரங்களுடைய ப்ரதிஷ்டாவிதி சொல்லப்பட்டிருக்கிறது. அதன்பிறகு மூன்றுவித சக்ராங்கனம் சொல்லப்படுகிறது. அவை கர்ப்ப சக்ரம், ந்யாஸசக்ரம், தப்த சக்ரம் என்று மூன்றுவகைப்படும். பிறகு வைஷ்ணவர்கள், அநாதி வைஷ்ணவர்கள், ஆதி வைஷ்ணவர்கள், அவாந்தரவைஷ்ணவர்கள், முத்ரை, புண்டரத்தைத்தரிக்கிற வைஷ்ணவர்கள் என்று நான்குவிதமாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் அநந்த கருட விஷ்வக்ஸேன ப்ரும்மா முதலானவர்கள் அநாதி வைஷ்ணவர்கள் என்றும், வைகானஸ ஸூத்ராவலம்பிகள் ஆதிவைஷ்ணவர்கள் என்றும், அந்ய ஸூத்ரத்தைச் சேர்ந்தவர்களும், பாஞ்சராத்ர மதத்தை அவலம்பித்தவர்கள் அவாந்தர வைஷ்ணவர்கள் என்றும், பாகவத மதாவலம்பிகள் புண்ட்ரம் முத்திரை தரித்த வைஷ்ணவர்கள் என்று உதாஹரிக்கப் பட்டிருக்கிறார்கள். வைஷ்ணவ ஸித்தாந்தம் வைதிகம், தாந்த்ரிகம், பாக்த்தம் என்று மூன்றுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதில் வைகானஸம் வைதிகம் என்றும், பாஞ்சராத்ரம் தாந்த்ரிகம் என்றும், பாகவதமதம் பாக்த்தமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவர்களுக்கு தீக்ஷாவிதி மூன்றுவிதம். கர்ப்பசக்ர தீக்ஷை, தப்த சக்ர தீக்ஷை, ந்யாஸசக்ர தீக்ஷை என்று மூன்றுவிதம். அதில் கர்ப்பசக்ர

தீக்ஷையானது விஷ்ணுபலி யென்னும் கர்மாவால் செய்யப்பட்டதாகும். இது வைகானஸர்களால் மாத்திரம் அனுஷ்டிக்கத்தக்கது. தப்த அல்லது பாஹ்யசக்ரதீக்ஷையானது பழுக்கக் காய்ச்சப்பட்ட சங்குசக்ரங்களால் செய்யப்படுகிற ஸமாஶ்ரயணவிதி. இது பாஞ்சராத்ர மதாவலம்பிகளால் அனுஷ்டிக்கத்தக்கது. இரண்டு புஜங்களிலும் சங்கு சக்ரங்களை மண் சந்தனம் முதலிய த்ரவ்யங்களால் எழுதுவது ந்யாஸ சக்ரமென்று சொல்லப்படுகிறது. இது பாகவத மதாவலம்பிகளால் அனுஷ்டிக்கத்தக்கது.

வைகானஸர்கள் சுத்தர், மிச்ரர், ஸ்மார்த்தர்கள் என்று மூன்றுவிதமானவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். நிஷேகாதி க்ரியைகளை வைகானஸ ஸூத்ர ரீதியாக செய்கிறவர்கள் சுத்த வைகானஸர்கள். நிஷேகாதிஸம்ஸ்காரங்களை வேறு ஸூத்ர ப்ரகாரம் அனுஷ்டித்து வைகானஸ சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட தீக்ஷை பெற்றவர்கள் மிச்ரவைகானஸர்கள். மூன்றாவது ஆச்ரமமான வைகானஸ ஆச்ரமத்தில் இருப்பவர்கள் ஸ்மார்த்த வைகானஸர்கள். என்று சொல்லப்படுகிறார்கள். சுத்த வைகானஸர்களுக்கு கர்ப்ப சக்ராங்கனமும், மிச்ரவைகானஸர்களுக்கு தப்த சக்ராங்கனமும், ஸ்மார்த்த வைகானஸர்களுக்கு ந்யாஸ சக்ராங்கனமும் விதிக்கப்பட்டிருக்கிறது. வைகானஸ சாஸ்த்ரத்தை நிகமம் என்றும், பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தை ஆகமம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு கர்ப்ப சக்ர, ந்யாஸசக்ர, தப்தசக்ர விதிகள் ஸம்பூர்ணமாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

பிறகு ஊர்த்வபுண்ட்ரவிதியும் நாம ஸம்ஸ்காரமும் சொல்லப்பட்டிருக்கின்றன. பிறகு தேவதார்ச்சனம் இரண்டுவிதம் என்றும், அதாவது வைகானஸம் (வைதிகம்) பாஞ்சராத்ரம் (தாந்த்ரிகம்) என்று இரண்டு விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வைகானஸ ரீதியால் பிம்பத்துக்கு ஆராதனம் செய்தால் ராஜாவுக்கும் ராஜ்யத்துக்கும் க்ஷேமம் உண்டாகும். வேறு ஸூத்ர ரீதியால் செய்யப்பட்டால் பலனில்லாத பூஜையாகும். வைகானஸர்களுடைய கைகளால் கொடுக்கப்பட்ட தீர்த்தம் கங்கையில் ஸ்நானத்துடன் ஸமபலனை உடையது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பிறகு ஐந்து விதமான திவ்யதேசத்தின் பலங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தெய்வம், ஆர்ஷம், பௌராணம், மானுஷம், ஸ்வயம் வ்யக்தம் என்று ஸந்நிதிகள் ஐந்து விதமாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. தேவதைகளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது தெய்வம் என்றும், ருஷிகளால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது ஆர்ஷமென்றும், புராணஸித்தமானது பௌராணமென்றும், மனுஷ்யர்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது மானுஷம் என்றும், பக்தர்களிடத்தில் க்ருபையால் பகவான் ஸ்வயமாக ஆவிர்பவி

த்தவிடம் ஸ்வயம் வ்யக்தம் என்றும் சொல்லப்படுகிறது. எல்லாக்ஷேத்திரங்களுக்குள் ஸ்வயம் வ்யக்தம் உத்தமமென்றும்,

𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌯𑍋𑌜𑌨𑌾𑌦𑌰𑍍𑌵𑌾𑌕𑍍 𑌦𑍈𑌵𑌤𑌂 𑌦𑌶𑌯𑍋𑌜𑌨𑌮𑍍
𑌪𑌞𑍍𑌚𑌯𑍋𑌜𑌨 𑌆𑌰𑍍𑌷𑌂 𑌚 𑌪𑍌𑌰𑌾𑌣𑌂 𑌯𑍋𑌜𑌨𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ॥

என்கிறபடியே மானுஷக்ஷேத்திரத்தில் யோஜனைவரையிலும், தைவதக்ஷேத்திரத்தில் பத்துயோஜனை வரையிலும், ஆர்ஷக்ஷேத்திரத்திற்கு ஐந்து யோஜனைவரையிலும், பௌராண க்ஷேத்திரத்துக்கு மூன்று யோஜனை வரையில் ஸாந்நித்யமிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு வைகானஸருடைய பெருமையைச்சொல்லி கர்ப்பவைஷ்ணவர்கள் ஆனதால் மகாபரிசுத்தர்கள் என்று சொல்லி ஸம்ஹிதை முடிந்துவிட்டது.

ஸ்ரீ:.

பழைய பெரியோர்கள்.

(ஸ்ரீ. உப. ஸ்ரீசைல தாதாசாரியர்.)

நம்முன்னோர்கள் அநாதிகாலமாகவே வேதவேதாங்கங்களிலும் சாஸ்திரங்களிலும் காவ்யங்களிலும் முதிர்ந்த தேர்ச்சிபெற்றிருந்தார்கள். அந்தந்தக்காலத்திய மனிதர்களின் புத்தி வலிவுக்கேற்றபடி லளிதமும் கடினமுமாக ஒவ்வொரு விஷயங்களிலும் கிரந்தங்களை எழுதிவைத்தார்கள். அந்தக் கிரந்தங்களின் மூலமாய்த் தங்களுக்குக் கிடைக்கக்கூடிய கீர்த்தியையும் தர்மத்தையும் மாத்திரமே எதிர்பார்த்தார்கள். இவ்வளவேயல்லது தங்கள் வரலாறுகளைத் தாங்களே எழுதிவைப்பதென்கிறவழியை அவர்கள் யாரும் கைக்கொள்ளவில்லை. அதுபோல அவர் அவர்கள் தங்கள் ஆசார்யர்கள் விஷயமாயும் அப்படிப்பட்ட குறிப்புகளை அல்லது விவரங்களை எழுதிவைக்கும் வழியைக் கையாளவில்லை. ஆகவே நாம் முக்கியமாய் அறிந்துகொள்ளவேண்டிய அம்சங்களை நமக்குச் சரிவர தெரிய இடமில்லாமல் போயிற்று. வெகுநாள்களுக்குப் பின்பு யாரோ சிலர் ஒருவாறு எழுதி வைக்கலானார்களென்றாலும் அவை பலவிதத்திலும் அவநம்பகத்திற்கிடமாக முடிந்தது. அவர்கள் எழுத்து மூலமான ஆதாரமில்லாமல் கேள்வி ஆதாரங்களைக்கொண்டு எழுதினார்கள். கேள்வி பலவாறு வேறுபாடடைந்துவிடக்கூடியது ஸம்பாவிதமேயாகையாலும் அந்தந்தக் கொள்கைக்காரர்கள் தங்கள் தங்களுக்கு அனுகூலமான வழியில் கேள்வி முறையில்வந்த அந்தந்த விஷயங்களை உருவு வேறுபடுத்தி வழங்கவராயினராகையாலும் நடுநிலையானவர்கள் உண்மை கண்டறியவும் நம்பவும் இடமில்லாமல் போய்விட்டது.

சிறிது காலத்திற்கு பிறகு இம்மாறுபாடுகள் கிரந்தங்களிலும் இடம்பெற்று அரசு செலுத்த ஆரம்பித்தன. மஹாபாரதத்தை யெடுத்துக்கொள்வோம். நம்தேசத்துப் பாடம் ஒருவிதமாகவும் உத்தர தேசத்துப்பாடம் ஒருவிதமாகவும் ஆகிவிட்டது. ஸாதாரணமாய் அறுநூறு எழுநூறு வருஷங்களுக்கு முன் நம் தமிழ்நாட்டிலிருந்த மஹான்கள் தங்கள் கிரந்தங்களில் எடுத்துதாஹரித்த வசனங்கள் இப்பொழுது ப்ரசுரமாயிருக்கும் புஸ்தங்களில் இல்லாமல் போகவும் அந்த இடத்தில் வேறுவசனம் இருக்கவும், அல்லது அதற்கு நேர்விரோதமான வசனம் காணப்படவும், இப்படி மாறுபாடடைந்து வடதேசத்துக் கோசங்கள்காணப் படுகின்றன. மஹா பாரதத்தைச் சோதிக்க வேண்டுமென்று காஞ்சீபுரத்தில் சிலபண்டிதர்கள் ஆரம்பித்தபோது சோதனைக்காதாரமாக வந்திருந்த கோசங்களில் 300 வருஷங்களுக்கு முன்காசியில் எழுதப்பட்டதாகக் குறிப்பிட்ட ஒருகாகிதபிரதி நாம் கீழ்குறித்த மாறுபாட்டுடன் இருந்தது என்றால் இவ்விதமான கலக்கம் அதற்கு முன்னையே உண்டாயிருக்க வேண்டுமென்றேற்படுகிறதன்றோ? அத்வைத பாஷ்யகாரராகிய ஸ்ரீசங்கராசாரியரவர்கள் உதாஹரித்த ச்லோகங்களும் பாடங்களுமே அதில் மாறுபாடடைந்திருந்ததென்பது முக்கியமாய்க் குறிப்பிட வேண்டிய விஷயம்.

அதிலும் தென்தேசத்திய கோசங்களிலேயே விராடபர்வம் தலைகீழான வேறுபாடடைந்து உறுக்குலைந்து போயிருக்கக் காணப்பட்டது. மிகவும் ஆச்சரியமான ஸம்பவம். அத்தியாயம் வேறு, அதன் ஆரம்பம் வேறு, முடிவுவேறு, கதைவேறு, கணக்குவேறு, இப்படி ஒவ்வொன்றும் வெவ்வேறாய்க் காணப்பட்டது. அதில் உண்மையைக் கண்டுபிடிக்க மறுபடி பகவான் வேதவியாஸராய் அவதாரம் செய்யவேண்டுமல்லது வேறு வழியில்லை.

நாம் (ஸ்ரீவைஷ்ணவர்கள்) வேதத்திற்குச் சமானமாக ப்ரமாணமாயெடுத்தாலும் ஸ்ரீபாஞ்சராத்திர ஸம்ஹிதைகளில் இந்தவிதமான கலக்கம் நுழைந்துவிட்டது மிகவும் துக்கிக்கத்தக்க விஷயம். ஆகா! ஆச்சர்யம்! எவ்விதத்துணிவாய் வேலைசெய்யப்பட்டது. நம்மவர் கற்ற கல்விக்கு இதுவா பலம். ஜ்ஞானமில்லாதவனை யெழுதச்சொன்னால் பிழைகள் அதிகமாக விழுமேயென்று படித்தவர்களைப் புத்தகம் பிரதி எழுதச் சொன்னால் அவர்கள் தங்கள் மனதின் போக்குப்படி எடுத்தும் கூட்டியும் மாற்றியும் எழுதிவைப்பதா நியாயம்?

ஒரு ஸம்ஹிதையில் பிரஸாதவகைகளும் உபதம்ச (ஊருகாய்) வகைகளும் செய்யவேண்டிய பாகம் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் சாற்றமுது (ரஸம்) செய்யச்சொன்ன இடத்தில் அதற்குச் சேர்க்கவேண்டிய பொடியில்

"**களஞ்சம்**" சேர்க்கும்படி யெழுதப்பட்டிருக்கிறது. தனியா (கொத்தமல்லி விரை) என்று அதற்கு அர்த்தமாகவேண்டுமென்பது அவரது அபிப்பிராயம். '**ந கலஞ்ஜம் பக்ஷயேத்**' களஞ்சத்தைப் புஜிக்கக்கூடாதென்று நிஷேதம் இருப்பதாக நம்மவரில் ஆபாலகோபாலம் பிரசித்தமாயிருக்க அதே களஞ்ஜத்தை உபயோகித்துஅவர் எழுதிவைத்த வேடிக்கை கவனிக்கத்தக்கது.

இப்படியே மற்றொரு ஸம்ஹிதையில் வடகலையார் தப்பென்று ஆக்ஷேபிக்கிறதும் தென்கலையார் நியாயமென்று கொண்டாடுவதுமான சில ஆசாரங்களைப்பற்றி இடங்கொடுக்கும் வசனங்கள் காணப்படுகின்றன. மற்றொரு ஸம்ஹிதையில் ஆழ்வார்களின் திருவவதாரமே விவரமாகச்சொல்லப்பட்டிருக்கிறதாம். ஆசார்யர்களின் சரித்திரங்களும் எதுவாவது ஸம்ஹிதைகளில் இராமல் போகாது.

ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் நூற்றெட்டில் நேரே எம்பெருமான் திருமுகமண்டலத்திலிருந்து உதித்தனவாகையால் மூன்று ரத்நங்கள் என்று மதிக்கப்பட்டவை மூன்று ஸம்ஹிதைகள். அவையாவன:— ஸ்ரீஸாத்வதம், ஸ்ரீபௌஷ்யகரம், ஸ்ரீமத் ஜயாக்கியம். அவற்றில் மூன்றாவதாகிய ரத்நம் இப்போது உரு வேறுபாடடைந்திருக்கிறதென்னும் விஷயத்தை இங்கு குறிப்பிடாமல் போகமுடியாதிருக்கிறதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அதன் முதல் படலத்தின் கடைசியில் சுமார் ஒரு அத்தியாய அளவு கிரந்தம் சேர்த்துப் பெருக்கப் பார்க்கப்பட்டிருக்கிறது. எல்லா காகிதப்பிரதிகளிலும் அதைப்பார்த்து எழுதிவைக்கப்பட்ட ஓலைப்பிரதிகளிலும் மாத்திரம் இந்த வளர்ச்சி காணப்படுகிறதேயல்லது பழைய ஓலைப்பிரதிகளில் இல்லையென்பதை எல்லாரும் மறவாமல் கவனத்தில் வைத்திருக்கவேண்டும். அந்த உரு வேறுபாட்டின் அமைப்பையும் அதில் உள்ள குற்றத்தையும் அதுவேண்டிவந்த ஆவசியகதையையும் மற்றும் சில குறிப்புகளையும் மற்றொரு முறை தனியே எடுத்துக்கூறுவோம்.

ஜோதிஷ சாஸ்திரத்திலும் இது அரசு செலுத்தாமல் போகவில்லை: முக்கியமாய் ஒருவிஷயம் சொல்லவேண்டியதாகிறது. ஜோதிஷ விஷயத்தில் கோளபாகம் கணனபாகங்களாகச் சொல்லும் கிரந்தங்களில் புராதனமும் முக்கியமுமானது ஸூர்யஸித்தாந்தம். அதிலேயே சிலவிஷயம் பின்னோரால் சேர்க்கப்பட்டதென்றும் அதனால் அந்த பாகத்திற்குத்தான் வியாக்கியானம் செய்யவில்லையென்றும் ரங்கநாதரென்கிற வியாக்கியாதா எழுதியிருக்கிறார். இந்த உரையாசிரியர் ஜிஹாங்கீரது ஸபையில் பண்டிதராயிருந்த ஸ்ரீகிருஷ்ணனென்பவரது தம்பியென்றும், சகவருஷம் **1525**-ல் காசியில் அந்த வியாக்யானத்தைச் செய்து விசுவேசுவரனுக்கு அர்ப்பணம் செய்தேனென்றும் அவரே எழுதியிருக்கிறார். ஜிஹாங்கீரின் ஆட்சிகாலம் கி. பி. **1605 - 1627.** ஆகவே இந்தக்குழப்பம் இப்போதைக்குச் சுமார் **300**-வருஷங்களுக்கு முன்னம் ஆரம்பிக்கப்பட்டதாகிறதே.

இதுபோக— நமது பெரியோர்களில் பிரதானர்களாகிய ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரம் சரித்திரம் ப்ரபாவம் முதலிய விஷயத்தில் குருபரம்பராப்ரபாவம் என்னும் பெயரால் சிறியதும் பெரியதுமான கிரந்தங்கள் வெளியேறின. கொஞ்சம் ஏறக்குறைய இப்போதைக்குப் பத்து வருஷங்களுக்குமுன் வரையில் அவற்றிற்கு நம்மவர்கள் பக்த்யதிசயத்தால் வேதங்களைப்போலவே, அதிலும் அதிகமாகக்கூட மதிப்புகொடுத்துவந்தார்கள். அவற்றில் ஒன்றுக்கொன்று காணப்பட்ட வேறுபாடுகளைக்கூட உபநிஷத்து இரண்டாம் ப்ரச்நத்தில் ஆந்தரபாடம் திராவிடபாடம் என்கிற பேதம்போல் நினைத்து அந்தந்த ஸம்ப்ரதாயஸ்தர்கள் அதைப் பெருமைகொண்டாடி போற்றிவந்தார்கள். சாஸநங்களும் சரித்திரங்களும் விமர்சிக்கப்படுகிற இந்தக் காலத்தில் அவைகள் கொஞ்சம் கொஞ்சமாய் மதிப்புக்குறைவு பெற்றுக்கடைசியாய் மதாந்தரஸ்தர்கள் மாத்திரமென்றிராமல் நம்மவரும் கூடக் கைத்தட்டிச் சிரித்துக் கேலிசெய்து தூஷிக்க இடமாய் முடிந்துவிட்டன. இது நிரம்பவும் சோகிக்கத்தக்க விஷயம். சுத்தமாய் காலம் சரித்திரங்கள்இவைகளைச் சொல்லும் நூல்கள் கிடையா. இருப்பவை அவைகளை சரியாய்ச் சொல்லவில்லை. பின்னை வழியென்ன? பாருங்கள்.

கலியுகம் பிறந்த நாற்பத்திமூன்றாவது நாளாகிய பிரமாதி வருஷம் வைகாசிமீ நம்மாழ்வார் திருவவதாரம் என்றும் கலி பிறந்து **398** வதான நளவருஷம் கார்த்திகைமாதத்தில் கலியன் திருவவதாரமென்றும் குருபரம்பராப்ரபாவங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது. சரித்திர ஆராய்ச்சியில் இக்காலம் ஸரியல்லவென்றேற்படுவதாக ஆங்கிலப்பயிற்சியும் நம் பாஷைப் பயிற்சியும் உயர்தரமாகப்பெற்ற நண்பர் சிலர் கூறக்கேட்டிருக்கிறேன்.

நம்மவர்கள் எவ்வளவு ஸாத்தியமோ அவ்வளவு தூரம் முன்னேயென்று எழுதுவது பெருமையென்று நினைத்தார்கள். இக்காலத்திய ஆங்கிலாபிமானிகள் எவ்வளவு எவ்வளவு ஸாத்தியமோ அவ்வளவு கீழே இழுத்து கிட்டழைத்துக்கொள்வது பெருமையென்று பாடுபடுகிறார்கள். இவர்களுக்கு அரசாங்கத்தார் உதவி. சாஸநங்களும் சரித்ரங்களும் ஆதாரம், முன்னையோருக்கு இரண்டுமில்லை. வெறுங்கை முழம்போட வேண்டும். கலியன் அருளிச்செய்த திருமொழி ௨-ம் பத்து ௮-ம் திருமொழியின் ௧௦-வது பாட்டு அடியில் வருமாறு.

மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீள் முடிமாலை வயிரமேகன்
தன்வலிதன் புகழ்சூழ்ந்த கச்சி அட்டபுயகரத்தாதிதன்னை
கன்னிநன் மாமதிள் மங்கை வேந்தன் காமருசீர்க் கலிகன்றி குன்றா
இன்னிசையாற்சொன்னசெஞ்சொல்மாலையேத்தவல்லார்க்கிடம்வைகுந்தமே.

என்பதாம்.

தொண்டையர்கோ னென்பதற்குத் தொண்டைமான் சக்கிரவர்த்தியென்று வியாக்கியானம் செய்யப்பட்டது. வயிரமேக னென்பது அவன்பெயர் என்று சில கோசங்களிலும், அவன் குடிப்பெயர் என்று சில கோசங்களிலும், பாடம் இருக்கிறது.

இங்கிலீஷ்க்காரர் காட்டியபடி சரித்திர ஆராய்ச்சியில் ராஷ்ட்ரகூட வம்சத்தில்.

முதல் தந்திவர்மா.
|
முதல் இந்திரன்.
|
முதல் கோவிந்தன். கி. பி - 660.
|
முதல் கக்கன். (கர்க்கன்), (ஹரிவிக்கிரமன்.)
கி. பி. 685.
|
இரண்டாவது இந்த்ரன். கி. பி. 710. | கிருஷ்ணன் (சுபதுங்கன் கண்ணேசுவரன், அகாலவர்ஷன்) கி. பி. 756.
|
தந்தி துர்க்கன் (இரண்டாவது தந்திவர்மா) (வல்லபன்)
(வயிரமேகன்) கி. பி. 753 - 754.

இந்த வைரமேகனது ஸேனையானது கர்ணாடக ஸேனை யொன்றை ஜயித்த தென்றும் அந்த கர்ணாடக ஸேனை ஸ்ரீஹர்ஷனை ஜயித்து வந்த தென்றும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இந்த வைரமேகன் காலத்தைக் கொண்டு கலியனை அவனுக்குப்பின் இழுத்துவைப்பதாகக் கேள்விப்பட்டு இது எழுதலாகிறது. இதனால் நம்கொள்கைக்கும் இந்த கொள்கைக்கும் (3500) வருஷங்கள் வித்யாஸப் படுகிறது. அதனால் நமது முன்னோர்களின் சரித்திரப் பெருமையே ஒளிமழுங்கிப் போகவேண்டி வருகிறது.

ஒரே வம்சத்தில் ஒரே பெயரில் பல அரசர்கள் இருப்பதுண்டென்பதும், அவர்கள் முதலாவது இரண்டாவது என்னும் விசேஷணத்தால் பகுத்தறியப்படுவார்க ளென்பதும், கலியன் பாசுரத்தில் பொதுவாக வயிரமேக னென்று கூறப்பட்டிருக்கிறதல்லது முதலாவது இரண்டாவது என்று குறிக்கப்படவில்லையென்பதும், அவன் இந்த வம்சம் என்று கூறப்படவில்லையென்பதும், நமக்கு கொஞ்சம் தேறுதலைக் கொடுக்கின்றன.

இங்கிலீஷ் அரசாங்க உதவியால் ஏற்பட்ட சரித்திர ஆராய்ச்சியில் தாம்பர சாஸனங்களினாலும் சிலாசாஸநங்களாலும் வெகு விஷயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அதில் ஒரு ஸம்சயத்திற்கிடமான அம்சம் இங்கு காட்டப்படுகிறது. மிகப் பிரசித்திபெற்றவரும் மஹா பண்டிதனும் தாராநகரத்தின் அரசனுமாகிய போஜராஜனைப்பற்றி அந்த ஸம்சயம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது :—

(௧) பரமாரன் என்பவன் வம்சத்தில்
|
பரமபட்டாரக மஹாராஜாதி ராஜபரமேசுவர
(௨) ஸ்ரீ கிருஷ்ணராஜதேவன்.
(உபேந்தர ராஜன்.)
|
(௩) ஸ்ரீ வீரஸிம்ஹன்.
(வைரிஸிம்ஹன், வைரஸிம்ஹன்.)
|
(௪) ஸ்ரீ ஸீயகதேவன்.
|
(௫) முஞ்ஜராஜன். (அமோகவர்ஷதேவன்.)
(வாக்பதிராஜதேவன்) (ப்ருதுவீவல்லபன்.)
(ஸ்ரீவல்லப நரேந்த்ரதேவன்.)
|
(௬) ஸ்ரீ ஸிந்துராஜன்.
|
(௭) ஸ்ரீமான் போஜராஜன்.
இவ்விதம் ஒருவம்சாவளி.
கீழ் (௫) என்று குறிப்பிட்ட முஞ்ச ராஜன்.
|
வைரிஸிம்ஹன், (வஜ்ரடன்)
|
(ஸீயகன்.) ஸ்ரீஹர்ஷன் (கொட்டிகனை வென்றான்)
(ஸிம்ஹதத்தன்)
|
வாக்பதி ராஜன், (முஞ்சன், அமோஹவர்ஷன்; உத்பலராஜன்) | ஸிந்து ராஜன். (ஸிந்துலன், ஸிந்துலகன்.) குமார நாராயணன், நவஸாஹஸாங்கன் பி. பி. 975-1022.
|
ஸ்ரீமான் போஜன், கி. பி. 1022. 1061

இவ்விதம் ஒரு வம்சாவளி.

பிரசித்தி பெற்ற ஒரு அரசனுடைய வம்சத்தில் பாட்டனு பெரியதகப்பனு வென்று ஸம்சயிக்கப் படும்படி இரண்டுவித சாஸநங்கள். இதொருதேற்றரவு.

குருபரம் பரையில் யார் யார் யார் யாருடைய அம்சம் என்பது ஒரு விசாரம். ஆழ்வார்களில் தலைவரும் ஆசார்யர்களில் முதல்வரும் பரபந்ந ஸந்தான கூடஸ்தருமான நம்மாழ்வரரைப்பற்றி குருபரம்பரா ப்ரபாவத்தில் விஷ்வக்ஸேனருடைய அவதாரமென்று எழுதப்பட்டிருக்கிறது. நம்பிள்ளை அருளிச்செய்த திருவிருத்த வியாக்கியானத்தில்,

"ஆழ்வார் முக்தரென்பர் சிலர், அருளாளப் பெருமாளெம்பெருமானர் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தாரொருத்தர் முக்தப்ராயரென்பர், அங்குள்ளாரிலே ஒருவரை நீர்போய் பிறவுமெனப் பிறந்தார் என்பர்கள் சிலர். வங்கீபுரத்து நம்பி எம்பெருமான் தானேவந்தவதரித்தானென்பர். இப்படி சொல்லுகைக்கடி ஆழ்வாருடைய ப்ரபாவம் இருக்கும்படி.........மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து என்று.........கூப்பிடு கையாலே ஸம்ஸாரிகளிலே ஒருவராமித்தனை." என்றருளிச்செய்திருக்கிருர். பெரிய வாச்சான்பிள்ளை வியாக்கியானத்திலும் இதே வாக்கியாநுபூர்வீயிருக்கிறது.

குறிப்பு:— விசுவாமித்ர மஹர்ஷி காமதேனுவையிழுத்தபோது அக்கி குண்டத்திலிருந்து (க) பரமாரன் தோன்றினன்.

(ரு) முஞ்சன் விக்கிரமசகம் 1053 கி. பி. 1296-வரை அரசு செலுத்தினன். இவன் காலத்தில் சாஸநங்களுக்கு உத்திரவிடுகிற உத்தியோகத்தில் ருத்ராதித்யனென்று ஒருவன் இருந்தான். வி. ச. 1031—(கி. பி. 1279) பண்டித தனிகர் குமாரனுகிய வஸந்தா சார்யருக்கு கிரமம் தானம் செய்திருக்கிறன். வி. ச. 1036 கி. பி. 1279 பட்டேசுவரீ தேவிக்கு கிராமம் தானம் செய்திருக்கிறன்.

(சு) இவர் காலம் வரையில் உஜ்ஜயினீ ராஜதானியாக இருந்தது. போஜ சரிதத்தில் காளிதாசன் என்று சொல்லப்பட்டிருக்கிற பரிமளகவிநவஸாஹஸாங்க சரிதமென்னும் காவியம் செய்திருக்கிருர்.

(எ) இவர்தான் தாராநகரத்தை ராஜதானியாகக் கொண்டார். சாஸநங்களில் இப்படி மாறுபாடும் வேறுபாடும் காணப்படுகிறது. இதைத்தேடிப் பார்த்துச் சொல்வது யார். சொன்னலும் கேட்பதுயார்? கேட்டாலும் சரியாய் ஸமாதானம் சொல்பவர் யார்? இப்படிப்பட்ட சாஸநங்களைக் கொண்டு நம்முன்னேரைப் பொய்யராக்குவது எவ்வளவு நியாயமோ?

வடக்குத் திருவீதிப்பிள்ளை அளிச்செய்த திருவாய்மொழி வ்யாக்யானம் முப்பத்தாருயிரப்படியிலே ஸர்வேசுவரன் நித்யஸம்ஸாரியாய்ப் போந்த இவரை முதலடியிலே விசேஷகடாக்ஷம் செய்தருளினன் என்று அருளிச்செய்திருக்கிருர்.

குருகாபுர மாஹாத்ம்யம் திருக்குறுங்குடி மஹாத்ம்யம் முதலிய புராணவசனங்களைக்கொண்டு ஆழ்வார் எம்பெருமானுடைய அவதாரமென்று பெரிய பரகாலஸ்வாமி திருவுள்ளம்பற்றி அருளிச்செய்திருக்கிருர்.

இப்படி சொல்லப்படும் உத்கர்ஷமும் ப்ரபாவமுமெல்லாம் ஸ்தோத்ரரூபமாயும் உல்லேக ரூபமாயும் நின்றுவிடுகிறது. தத்வாம்சம் நிச்சயமாய் ஏற்பட இடமில்லாமல் இருக்கிறது. ஸ்ரீ தேசிகன் ஆழ்வார்களை அபிநவ தசாவதாரமென்று திருவுள்ளம்பற்றி அருளிச் செய்திருக்கிருரென்பதும் திருவுள்ளத்தில் பாவிக்கத்தக்கது. ஆனல் அனுப்ரவேசமென்று சிலரும் பூர்ணமென்று சிலரும் கொள்ளுகிருர்கள்.

இனி ஸ்ரீ பாஷ்யகாரரைப்பற்றி ருதிரோத்காரி கார்த்திகை மாதத்திய தீபிகை ஸஞ்சிகையில் வெளிவந்த பண்டிதபூஷணம் பகவத்விஷயம் வித்வான் ஸ்வாமியின் அருளிச்செயல் அனுஸந்திக்கத்தக்கது. இவ்வவதார விஷயமாய் சென்ற பராபவளூத்தில் வாணீ விலாஸினியில் எழுதி வெளியாயிருக்கும் அடியேனுடைய விண்ணப்பத்தை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன். அதாவது :—

(1) "தர்மங்கள் வாட்டமடைந்து அதர்மம் தலையெடுக்கும் ஸமயங்களிலெல்லாம் நான் அவதாரம் செய்வேன் என்பது கண்ணபிரானது பிரதிஜ்ஞை. சேதநர்கள் அஜ்ஞானத்தில் அழுந்தி கெட்டுப்போகாதவிதம் காப்பாற்றவேண்டி பகவான் நாராயணன் வேதவியாஸராய் அவதரித்து உபநிஷத்தினர்த்தங்களைக் கொண்டு ப்ருஹ்மஸூத்ரம் அருளிச்செய்தார். (2) மஹாபாரதம் செய்தமையால் வியாஸபகவானை நாராயணனுகவே எண்ணக்கடவது என்று புராணரத்நம்.

போதாயநர் என்று சிறப்புப்பெயர் பெற்ற உபவர்ஷர் த்ரமிடாசார்யர் குஹதேவஸ்வாமிகள் பாருசிகள் கபர்த்தி ஸ்வாமிகள் ரங்காசார்யரெ

---

(1) 𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

(2) 𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑍍𑌵𑍈𑌪𑌾𑌯𑌨𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍 ।
𑌕𑍋 𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑍋 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑌕𑍃𑌦𑍍 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

ன்று பெயர் பெற்ற ப்ருஹ்மநந்தி ஸ்வாமிகள் இவர்கள் அந்த ஸூத்திரத்திற்கு விரிவும் சுருக்கமும் தெளிவும் கூடமுமாய் வியாக்கியானம் செய்தார்கள். அவையெல்லாம் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்திற்குச் சார்பானவை.

காலக்கிரமத்தில் மேதாவிகள் பலர் தோன்றி தங்கள் தங்கள் அபிப்பிராயத்தின்படியே ப்ருஹ்மஸூத்ரங்களுக்குப் பொருள்விளங்க உரைசெய்யலானார்கள். ஆகவே உண்மைப் பொருள்களுக்கும் போலிப்பொருள்களுக்கும் பேதம் அறியப்படாதது மாத்திரமேயன்றி மதிமயக்கத்தால் போலிப்பொருள்களில் பெரும் நம்பிக்கையும் பிறக்கலாயிற்று. முன்னர் சார்வாகர் ஜைனர் பௌத்தர் முதலாயப் பல மதஸ்தர்கள் வேதங்களை ப்ரமாணமாக ஒப்பாத கூட்டமாகி உலகத்தை மயக்கத் தொடங்கியபோது ஸ்ரீ விஷ்ணுவானவர் த்ருதண்டம் வகித்த தத்தாத்ரேயராய் அவதாரம் செய்து வேதத்தை ரக்ஷித்தார் என்று ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கிறது.

"காணாதஸாங்க்ய பாஷண்டைர் ஹ்ரியமாணே பராவிமோஹிதா: ।
த்ரிதண்டதாரிணா பூர்வம் விஷ்ணுநா ரக்ஷிதா த்ரயீ" இதி.

அதுபோலப் பின்னும் ஒருஸமயம் வேதவேதாங்கங்களும் தர்மங்களும் வலிகுலைந்து சீர் கெட்டுப்போகவே அந்த நாராயணனே ஸ்ரீராமாநுஜாசார்யராக அவதாரம் செய்தான். தத்தாத்ரேயரைப் போலவே ஸ்ரீராமாநுஜா சாரியரும் ஸ்ரீமந்நாராயணனுடைய திருவவதாரம் என்பதை தேசிகன் யதிராஜஸப்ததியில் குறிப்பிட்டிருக்கிறார்.

"காஷாயேண க்ருஹீத பீதவஸநா தாஸீவ ஶுஶ்ரூஷிணீ
ஸாபேக்ஷம் ப்ரதிபத்ய பூஷணவதீ ஜயதி த்ரய்யந்தஸம்ரக்ஷிணீ ।
யஸ்ஸ்வாம் வித³தீர்த்தவஸதிர் யஸ்யா ஸ்வவ்ருத்தாம் யதீந்த்ர:
நாராயணம் ஸ்வதேஶநியதா கீர்த்தி: ஸ்வஜாமாத்ருத: ॥"

(தான் ஏற்படுத்திய தீர்த்தாநுக்கிரஹத்தால் புத்திவளர்ந்து தன்குணங்களை அடிக்கடி கீர்த்தனம் செய்பவர்களுக்கு ஸமுத்திரக் கோடிவரையில் இங்கில்லை இங்குமாத்திர மிருக்கிறதென்கிற நியமமில்லாதபடி (எல்லாவிடத்திலும்) கீர்த்திபரவியிருக்கும்படி செய்யவல்ல மாஹாத்ம்யத்தை யுடையதாய் பீதாம்பரத்தைக் காஷாயமாக்கி யணிந்து மூன்று தண்டங்களை யேந்தி வேதாந்த ரக்ஷணம் செய்யவேண்டி வந்ததான ஸ்ரீமந் நாராயணனது அவதாரம் மேன்மைபெற்று விளங்குகிறது என்பது இந்தச் ச்லோகத்தின் தாத்பர்யம்.)

இம்மஹாபுருஷனது சரித்திர விசேஷங்கள் அதிமாநுஷமா யிருப்பதால் இவர் அவதாரத்தைப்பற்றி பலவாறு கூறப்பட்டு வருகிறது.

அவற்றில் சில வருமாறு:—

"நாநா ஸ்ருஷ்டே ஜநிமதி ஸமயே நர்மபூமிம் விமித்ஸோ: ॥
அந்த்யம் வர்ணம் ப்ரபதி விபோராதிவ்யூஹஸ்ய ஹேதோ: ।
விச்வம் த்ராதும் விஷயநியதம் வ்யஞ்ஜிதாநுக்ரஹஸ் ஸந்
விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ் த்ரிதண்ட: ॥

(பற்பல ஸமயங்களை யேற்படுத்தி லீலா ரஸம் அநுபவிக்கும் ஸ்வபாவமுடையவனை ஸர்வேசுவரனது ஆதிவ்யூகரூபம் (வாஸுதேவ ரூபம்) அந்திம வர்ணத்தை உயர்த்தவே விஷயங்களில் அழுந்திக்கிடக்கும் ஜகத்தை ரக்ஷிக்கவேண்டி விஷ்வக்ஸேனர் எம்பெருமானாராகத் திருவவதாரம் செய்தருளினார். அவர் திருக்கைப் பிரம்பு த்ரிதண்டமாகியது என்பது இதன் கருத்து. நம்மாழ்வாராக எம்பெருமான் திருவவதரிக்கவே ஸ்ரீஸேனை முதலியார் எம்பெருமானாராக அவதரித்தார் என்று தாத்பர்யம்.)

அமுதனார் பஞ்சாயுதாவதாரமென்று அருளிச்செய்த "அடையார் கமலத்து" என்னும் நூற்றந்தாதி பாசுரத்தை தேசிகன் யதிராஜஸப்ததியில் அநுவதித்து அருளிச்செய்திருக்கிறார்.

ப்ருஹ்ம ஸம்ஹிதை உபேந்தர ஸம்ஹிதை பார்க்கவோபபுராணம் ஸ்காந்த புராணத்திலுள்ள பூதபுரி மாஹாத்ம்யம் இவைகளில் இவரை ஆதிசேஷாவதாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ தேசிகனது ப்ரசிஷ்யராகிய கடிகாசதம் அம்மாள் அருளிச்செய்த யதிராஜவிஜய நாடகத்தில் இவரை ஸுதர்சனம்சமாக அருளிச்செய்திருக்கிறது.

ஸம்ஹிதை புராணம் முதலியவை எவ்வளவு வரையில் பிரமாணமாக எடுத்துக்கொள்ள முடியுமோ ஏற்படவில்லை. அமுதனார் 108 - பாசுரத்திலும் தேசிகன் எழுதியது ச்லோகத்திலும் அருளிச்செய்யாத அம்சத்தை யேற்றுக் கொண்டாடத்தக்க வலிய ப்ரமாணம் யாதும் நிலை நில்லாது என்று பொதுப்பட அனைவரும் அறியவேண்டிய விஷயம்.

தேசிகன் திருவடிகளான ப்ருஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி அருளிச்செய்த திவ்யஸூரி ஸ்தோத்திரத்தில் ஆதிசேஷாவதாரமாக இவர் கூறப்பட்டிருக்கிறதாய் ஒரு சுலோகம் காண்கிறது. ஸ்ரீ பரகால மடப்பழக்கத்திலும் ஸூரபுரம் பண்டிதோத்தமர்கள் வழக்கத்திலும் இக்கொள்கையேற்கப்பட்டுவருகிறது. ஆகவே இது இப்போது துடங்கிற்று என்று நிச்சயமாய் அறியக்கூடாத பழையகாலம் முதல் இதுகொள்கை ஆதரிக்கப்பட்டு வந்திருப்பது தெரியவருகிறது.

இவ்விஷயத்தில் சில பெரியோர்கள் அருளிச்செய்தது, ஜகத் வ்யபாபாரத்தை நடத்துவதற்காக ஏற்பட்ட த்ரிமூர்த்திகளில் ருத்ரன் அத்வைத பாஷ்யகாரராகியஸ்ரீசங்கராசார்யராகவும் ஸ்ரீமந்நாராயணன் விசிஷ்டாத்வைத பாஷ்யகாரராகிய ஸ்ரீ ராமாநுஜாசாரியராகவும் ப்ருஹ்மா த்வைதபாஷ்யகாரராகிய மத்வாசாரியராகவும் அவதரித்தார்களென்று கூறுவது எல்லோருக்கும் உகப்புக்கிடமான சமரஸமார்க்க மென்பதாம்.

சங்கராசார்யருக்கு ஆசார்யராகிய கோவிந்த பகவத் பாதாசாரியர் ஆதிசேஷாவதாரமென்று சொல்லப்பட்டதைக்கொண்டு அத்வைத பாஷ்யத்திற்கு பெருமை வருமென்று நினைத்து எம்பெருமானாரையே ஆதிசேஷாவதாரமென்று நம்மவர் சொல்ல ஆரம்பித்திருப்பார்களென்று அடியேன் நினைக்கிறேன். லக்ஷ்மணர் ஆதிசேஷாவதாரமென்று ஸ்ரீ ராமாயணத்திலெங்கும் காணப்படவில்லை. மற்றும் ஸ்ரீ பாஷ்யகாரரது சரித்திரத்தில் இரண்டொரு போக்குவரத்துக்களை யெடுத்து இளையபெருமாள் நடவடிக்கை திருவாக்குகளோடு ஒப்பிட்டு மஹாவம்ச மஹிமை யென்னும் ஒரு கிரந்தத்தில் நிரூபித்துக்காட்டப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

இதுபோல மற்றும் அநேக விஷயங்களில் குருபரம்பர ப்ரபாவ புத்தகமெல்லாம் ஒவ்வொருவர் ஒவ்வோரம்சத்தில் உதாஸீனம் செய்யப் ப்ராத்திரமாய் விட்டதே யென்பதை நினைக்க ஆராத்துயர முண்டாகிறது. சிறிதுநாள் முன்பாக அவை வேதங்களைவிட அதிக மேன்மைபெற்ற பிரமாணமாக நினைத்துக் கொண்டாடப் பட்டிருந்த வாழ்வையும் இப்போது மூலைக்கு மூலை யிழுக்கப்பட்டு உருச்சிதைந்து சீர்குலைந்து போகிற தாழ்வையும் நினைக்கையில் மஹாகவி காளிதாஸனது ஒரு ஸுபாஷிதம் ஜ்ஞாபகத்தை விட்டகலாது நிலைபெற்றிருக்கிறது.

அதை நான் மற்றொரு பக்கத்தில் எழுதி யிருக்கிறேன் அது எந்த சுலோகமா யிருக்கலா மென்று நீங்களே யோசித்து ஊஹித்துப் பார்த்துக்கொண்டு அதன்பிறகு அந்தப் பக்கத்தைப் பாருங்கள். இரண்டும் ஒன்றுகவே இருக்கும்,

மேலும் குருபரம்பரா ப்ரபாவத்திலுள்ள தவறுகளை எடுத்துச் சொல்ல ஆரம்பித்தால் ஒவ்வொருவருக்கும் பன்னியுரைக்குங் கால் பாரதமாம் என்றுகும். எழுதப்புக்காலோ ஒவ்வொருவருக்கும்

“ நிஶ்ஶேஷம் பாரதம் ஸ்யாத் ”

ஆகாச மிடம் போதாது என்றுகும்.

ஸுபாஷிதம்:—

“ யாத்யேகதோ(அ)ஸ்தசிகரம் பதிரோஷதீநாம்
ஆவிஷ்க்ருதோ(அ)ருணபுரஸ்ஸர ஏகதோ(அ)ர்க்க: ।
தேஜோத்வயஸ்ய யுகபத்வ்யஸநோதயாப்யாம்
லோகோ நியம்யத இவாத்மதசாந்தரேஷு ॥ ”

சந்த்ரன் ஒரு பக்கத்தில் அஸ்தமடைந்துகொண்டிருக்கிறுன், ஒருபக்கத்தில் ஸூர்யன் அருணனை முன்னிட்டுக்கொண்டு உதயமாகிக்கொண்டிருக்கிறுன். பிரசித்திபெற்ற பெரிய தேஜஸ்ஸு இரண்டில் ஒரே காலத்தில் ஒன்று க்ஷயத்தையும் ஒன்று விருத்தியையும் அடைவதைக்கொண்டு யோசிக்குமளவில், ஈசுவர ஸ்ருஷ்டியில் அடங்கிய ஒவ்வொரு வஸ்துவும் தன்தன் தசைக்கேற்ற பலன்களை அனுபவித்தே தீரவேண்டியதென்கிற நிர்பந்தம் திடப்படுகிறது.

ஸ்ரீ:

உபயவேதாந்த ஐககண்ட்யம். *

(ஸ்ரீ. உப. தேசிகவரதாசார்யர்.)

ஶ்ரிய: பதியான ஸர்வேச்வரன் ப்ரமேயங்களான மற்றெல்லா சேதநசேதனங்களைக்காட்டிலும் (எல்லா கெட்டகுணங்களுக்கும் விருத்தமாயும் நல்ல குணங்களுக்கே இருப்பிடமாயுமிருப்பதால்) விலக்ஷணனுவதுபோல் அந்த ஸர்வேச்வரனைச்சொல்லும் வேதமும் மற்றெல்லா ப்ரமாணங்களைக்காட்டிலும் நித்யத்வத்தாலும் அபௌருஷேயத்வத்தாலும் விலக்ஷணமாகிறது. இவ்வர்த்தம் ‘ வேதஶாஸ்த்ராத் பரம் நாஸ்தி ந தைவம் கேஶவாத் பரம் ’ (வேதத்தைக்காட்டிலும் மேலான ப்ரமாணம் கிடையாது, கேசவனைக்காட்டிலும் மேலான தேவதை கிடையாது) என்கிற ஹரிவம்ச வசனத்தால் ஸித்தம். இந்த வேதம் ஸம்ஸ்க்ருதம் த்ராவிடம் என்கிற இரண்டு பிரிவை உடையது. அதில் த்ராவிட ப்ரபந்தத்திற்கு வேதத்வம் தென்மொழி மறையை வ்யாவர்த்திக்கிறதற்காக விசேஷணமிட்டுச் சொல்லப்பட்ட வடமொழிமறை என்கிற திவ்ய ப்ரபந்தவசனத்தாலும், ‘ ஸஹஸ்ராயாநாம் ச்ருதிசிரஸாம் ஸம்ஹிதாம் த்ருஷ்டவந்தம்’, ‘த்ராவிட ப்ரஹ்மவித்யா’ இத்யாதி ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திகளாலும் விளங்குகிறது. வேதத்தில் பூர்வபாகம் கர்மங்களைப்பற்றிச் சொல்லுகிறது. உத்தரபாகம் பரப்ருஹ்மத்தின் ஸ்வருபத்

* இது மதுரையில் நடந்த 14-வது வார்ஷிகஸங்கத்தில் உபந்யஸிக்கப்பட்டது.

தைப்பற்றிச் சொல்லுகிறது. இந்த உத்தரபாகமே வேதாந்த மென்னப்படும். அந்த வேதாந்தம் ஸம்ஸ்க்ருத வேதாந்தம் த்ராவிட வேதாந்தம் என்கிற இருவகையை உடையது. ஸம்ஸ்க்ருத வேதாந்தம் விசாரரூபமாகையால் சாரீரகசாஸ்த்ரம் என்கிற ப்ருஹ்ம ஸூத்ரம் ஸம்ஸ்க்ருத வேதாந்தமென்னப்படும். திருவாய்மொழி திராவிடவேதாந்தமென்னப்படும். இந்த இரண்டு வேதாந்தங்களுக்கும் ஐககண்ட்யமாவது ஒரே அபிப்ராயமுடையதாகை. வேதத்திற்கும் ஆழ்வாருக்கும் பரஸ்பரம் அபிப்ராயத்தைப் பின்சென்று சொல்லுகை அங்கங்கே புலப்படும்.

ஆழ்வார் 'உயர்வற' இத்யாதியால் கல்யாண குணங்களைச்சொல்லி இந்தக் கல்யாணகுணங்களை உடையவன் ச்ருதிஸித்தன் என்பதை 'உளன் சுடர்மிகு சுருதியுள்' என்று காட்டினார். வேதம் சொல்லும்பொழுது 'ப்ரஹ்மவாதிநோ வதந்தி, யேதத் ப்ரஹ்மணா ஸம்ஸிதா:' என்று ஆழ்வார்களை உள்கொண்டு சொல்லுகிறது. ஸ்தோத்ர ரத்நத்தில் ஸ்ரீ ஆளவந்தார் 'வியஸ்ய வைதிகாஸ்ஸ்ருதீ: ஸம்ஹிதா: ஸநாதநா:' என்று ஆழ்வார்களுடைய அபிப்ராயத்தை வேதங்கள் பின் சென்றமையை அருளிச்செய்தார். இந்த வேதாந்த விசாரரூபமான சாரீரக சாஸ்த்ரமென்கிற ப்ருஹ்ம ஸூத்ரத்தினுடைய அர்த்தத்தை திருவாய்மொழி விசதமாக்குகிறது. இவ்வர்த்தம் 'ஸூத்ர ஶாரீரகார்த்த ஸங்க்ரஹ விமர்ஶம் விம்ஶதி வக்தி ஸாரம்' என்கிற ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்தியால் அறிவிக்கப்படுகிறது. இன்னும் 'வ்யாஸ ஸூத்ரைகவாக்யத்வாத் ஸ்ருதிஶத ஶிரஸாம் த்ராவிடாத்வாய விவேகம் ஶ்ராவ்யம் வக்த்யுபாஸாநேத்ரஸ வாக்ய: உபாவேதௌ ஶ்ராவ்யௌ வடயித்ரா ஶ்ரேயம் யாதிஶேஷவதா வ்யாஸஜஸூத்ர நாராயண ஜ இதி ஸ ப்ரஹ்மஸூத்ர:' என்கிற ஆச்சான்பிள்ளை ஸூக்தியால் திருவாய்மொழி ப்ருஹ்மஸூத்ர விவரணமென்று நன்குவிளங்குகிறது. அதில் திருவாய்மொழியில் 'உயர்வற' என்கிற முதல்பாட்டு ப்ருஹ்மஸூத்ரம் நான்கு அத்யாயங்களில் சொல்லப்பட்ட காரணத்வம், அபாத்யத்வம், உபாயத்வம், உபேயத்வம் என்கிற நான்கு அர்த்தங்களைச் சொல்லுகிறது. 'நலமென்றுல்' ஆநந்தாவஹமான விபூதியைச் சொல்லுகிறது. நலமுடையவன் விபூதியை உத்பாத்யமாகவும் ரக்ஷ்யமாகவும் ஸம்ஹார்யமாகவும் உடையவன் என்று பொருள். இதனால் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகாரணத்வமென்கிற முதல் அத்யாயத்தின் அர்த்தம் சொல்லப்பட்டது. பரிபூர்ணனை ஸர்வேச்வரனுக்கு ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரம் எப்படிக்கூடும் என்கிற சங்கையை 'தேவஸ்யைஷ ஸ்வபாவோऽயம் ஆப்தகாமஸ்ய கா ஸ்ப்ருஹா' என்று பரிபூர்ணனுக்கு ஸ்ருஷ்ட்யாதி ரூபமான லீலை ஸம்பவிக்கலாமென்று பரிஹரிக்கிற இரண்டாவது அத்யாயார்த்தம் உயர்வற என்பதினால் காட்டப்படுகிறது. உயர்வு என்று வருத்தத்தைச் சொல்லுகிறது. வருத்தமற என்பதினால் லீலாசப்தார்த்தம் ஸூசிப்பிக்கப்படுகிறது. விரோதபரிஹாரத்தினுடைய ப்ராதான்யம் தோற்ற இரண்டாவது அத்யாயத்தின் அர்த்தம் முன்பு சொல்லப்பட்டது. ஆக உயர்வற என்கிற முதலடியால் முதல் இரண்டு அத்யாயங்களின் அர்த்தங்கள் சொல்லப்பட்டன. மயர்வற இத்யாதி இரண்டாவது அடியால் மூன்றாவது அத்யாயத்தின் அர்த்தம் சொல்லப்பட்டது. அதில் அஜ்ஞானவாசியான மயர்வு என்கிற பதத்தால் மூன்றாவது அத்யாயம் முதல் பாதத்தில் சொல்லுகிற ஜீவதோஷமும் மதிநலமென்பதினால் மூன்றாவது அத்யாயத்தில் மூன்றாவது பாதத்தில் சொல்லுகிற பக்திரூபாபந்நஜ்ஞானமும் சொல்லப்பட்டது. மேல் இரண்டு அடிகளாலும் நான்காவது அத்யாயார்த்தம் சொல்லப்படுகிறது. அதில் அயர்வறுமமரர்கள் என்பதினால் அர்ச்சிராதி மார்க்கத்தால் கொண்டுபோகும் ஆதிவாஹிகர்களையும், துயரறு என்பதினால் 'உபௌ ஸுக்ருத துஷ்க்ருதே தூநுதே' என்று சொல்லப்படுகிற துக்கநிவ்ருத்தி ரூப பலத்தையும், சுடரடி என்பதினால் 'ஸம்பத்யாவிர்பாவ:' என்று சொல்லப்பட்ட ப்ராப்யமான பரஞ்சுடரையும், தொழுதெழு என்பதினால் அபஹதபாப்மத்வாதி ஸ்வாபாவிக குணாவிர்பாவ கார்யமான நமஸ்காரத்தையும் சொல்லுகையால் நான்காவது அத்யாயத்தின் அர்த்தம் சொல்லப்பட்டது.

இப்படி திருவாய்மொழியால் ஆழ்வார் சாரீரகார்த்தத்தை விவரணம் பண்ணும்பொழுது முதல்பாட்டில் சாரீரகார்த்தத்தை சுருங்கச்சொன்னது போல் ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்ரீபாஷ்யத்தினுடைய ஆரம்பத்தில் 'அகில' இத்யாதி முதல் ச்லோகத்தில் சாரீரகார்த்தத்தை சுருங்க அருளிச்செய்தார். அதில் அகிலபுவந ஜந்மாதி முதல் விசேஷணத்தால் முதல் அத்யாயத்தின் அர்த்தமான ஜகத்காரணத்வமும், லீலா பதத்தால் இரண்டாவது அத்யாயத்தின் அர்த்தமான விரோதபரிஹாரமும், விநதபதத்தால் மூன்றாவது அத்யாயார்த்தமான பக்தியும், 'ரக்ஷைகதீக்ஷே' என்பதால் நான்காவது அத்யாயார்த்தமான பலமும் சொல்லப்படுகிறது. ஸ்ரீபாஷ்யகாரர் உயர்வற என்பதை லீலாவடித்தாலும், நலமுடையவன் என்பதை விநத பதத்தாலும், மேல் இரண்டு அடியால் சொன்னபதத்தை ரக்ஷைகதீக்ஷே என்பதினாலும் விவரித்தார்.

உயர்வற என்பதற்கு வருத்தமற என்று பொருள். ப்ரபந்தாரம்பத்தில் வருத்தமென்று அமங்களத்தைச் சொல்லலாமோ வென்னில், அற என்று நிஷேதிக்கிறபடியால் மங்களாவஹத்வம் உண்டு. இதுபோல் அகிலேத்யாதி ச்லோகத்தில் அகாரம் நிஷேதவாசியாக இருந்தாலும் நிக்ஷேபவசாத் சுபத்வம் உண்டு. மதிநலம் என்கிற இடத்தில் எனக்கு என்று சொல்லாமலும் என்மனனே என்று பின்பு தன்னைச் சொல்லுகையாலும் ஜ்ஞானத்தால் ஸத்தை உண்டென்று சொல்லப்பட்டது அந்த அர்த்தம் விநதாஸ்ஸந்து: என்பதினால் காட்டப்பட்டது. மயர்வற என்கிற விடத்தில் எனக்கு என்றுசொல்லாமையால் பலத்தில் ஸம்பந்தி ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கும் அந்வயம் உண்டென்னு மிடம் தோற்றுகிறது. அகிலேத்யாதி ச்லோகத்தில் வ்ராதரக்ஷைகதீக்ஷே என்பதால் ஸம்பந்தி ரக்ஷணமும் தோற்றுகிறது. இப்படி திருவாய்மொழி முதல்பாட்டும் ஸ்ரீபாஷ்யம் முதல் ச்லோகமும் ஒரே அபிப்ராய முடையது என்பது காட்டப்பட்டது இதுபோல திருவாய்மொழி பாட்டுக்களுக்கும் ஸ்ரீபாஷ்யகாருடைய ப்ருஹ்மஸூத்ர ஸ்ரீபாஷ்ய வசனங்களுக்கும் ஆங்காங்கு ஐககண்ட்யம் கண்டுகொள்வது.

ஸ்ரீ:.

ஸ்ரீராமாவதார காரணம்.

(கருடபுரம் ஸ்ரீ. உப. தி. ஈ. திருமலாசார்யர்.)

நம்முடைய ஸ்வரூப ப்ராப்திக்கு ஸாதனமாயும், ஸர்வ பலஸாதனமாயும், ஒரேதடவை அநுஷ்டிக்க வேண்டியதாயும், க்ஷணகாலத்தில் செய்து முடிக்கக் கூடியதாயும், எல்லாருக்கும் ஸாதாரணமாயும், அளவிட முடியாத மஹிமையை உடையதாயுமிருக்கிற ப்ரபத்தி என்னும் உபாயத்தை பலபடிகளிலும் தெளிவாய் வெளியிடுவதற்காகவே தயாபரவசனான ஸர்வேச்வரன் சக்ரவர்த்தித்திருமகனாய் அவதரித்தருளினான். அது எப்படி என்றால்:—

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ॥

(ஒரேதடவை சரணாகதி பண்ணினவனுக்கும் உன்னுடைய சொத்தாகவே ஆகிறேன் என்று யாசிக்கிறவனுக்கும் இருக்கிறவன் பொருட்டு ஸமஸ்தபூதங்களிடத்தில் நின்றும் அபயத்தைக் கொடுக்கிறேன், இதுவே எனக்கு ப்ரதிஜ்ஞை) என்றும், "ந த்யஜேயம் கதஞ்சந" (ஒரு ப்ரகாரத்தாலேயும் சரணமாக அடைந்தவனை கைவிடமாட்டேன்) என்றும், இது முதலான வசனங்களில் ப்ரபத்தி ஸ்வரூபத்தை வெளியிட்டான்.

ஸ்ரீராமன் ஒரே ஆவ்ருத்தி ப்ரபத்தி பண்ணுகிறவன் பொருட்டு அவன் கோரினபலத்தைக் கொடுக்கிறவனென்னும் ப்ரஸித்தியை அடைந்து, ப்ரபத்தி ஸர்வபலஸாதனம் என்று நிரூபிப்பதற்காகவே அவதரித்து தேவ வாயஸ விபீஷண சரணாகதிகளில் அவரவர் கோரின பலத்தைக் கொடுத்தும், முன்னமேயே தேவர்கள் ராவண ஸம்ஹாரம் ஆகவேண்டுமென்று ப்ரபத்தி பண்ணினபொழுது அவர்களுக்கு அபயத்தை வாக்தானம் செய்துவிட்டு பின்பு நாம் செய்யப்பட்ட ஸ்ரீபரதாழ்வான் ப்ரபத்தியை அங்கீகரித்துத் திரும்பினால் நெடுங்கானக மடைந்தாலன்றோ ராவணன் துஷ்டத் தனத்தை வெளியிடுவான், அதை வ்யாஜமாகக்கொண்டு நம் அம்புக்கு அவன் இரையாவான், அப்படியவனை உபேக்ஷித்து திருவயோத்திக்குத் திரும்பினால் 'ராமோ த்விர் நாபிபாஷதே' (ராமன் இரண்டுபடச் சொல்லமாட்டான்) என்கிற தம்முடைய ஸத்ய ஸந்தத்வம் போய்விடுமே என்று ஆலோசித்து, இரண்டு பேர்களுடைய ப்ரபத்தியையும் விபலமாக்க கூடாதென்றே நிஷ்கர்ஷித்து 'பரதனுக்குப் பாதுகமும் அரசுமீந்து'', 'மரவடியைத்தம்பிக்கு வான்பணையம் வைத்துப்போய் வானோர்வாழ, செருவுடைய திசைக்கருமம் திருத்தி வந்துலகாண்ட திருமால்' என்று சொல்லுகிறபடியே தமக்குப் பதிலாக திருவடிநிலையாழ்வாரை எழுந்தருளப்பண்ணிக்கொடுத்து ஸ்ரீபரதாழ்வான் ப்ரபத்தியைஸபலமாக்கி பூர்வமே பண்ணப்பட்ட தேவதைகளின் சரணாகதியையும் ஸபலமாக்குவதற்காகவே காட்டுக்குத்தானே எழுந்தருளி சரணாகதி ஸ்வரூபத்தை நன்றாக உலகத்துக்கு அநுஷ்டித்துக்காட்டி அநாதியான ஸம்ஸார ஸமுத்ரத்திலே விழுந்து மூழ்கி நம்மைக் கரையேறும்படி உபாயத்தை நமக்குக் காட்டிக் கொடுத்தருளினான்.

'பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்' (ஸாதுக்களை ரக்ஷிக்கிற தற்காகவும், துஷ்டர்களை சிக்ஷிக்கிற தற்காகவும் ஒவ்வொரு யுகமும் பிறக்கிறேன்) என்கிற பகவத் வசனத்தில் ஸாதுரக்ஷணமே முக்யமாகவும் துஷ்டநிரஸனம் முதலானவைகள் ஆநுஷங்கிக மாகவும் தோற்றுவதால் ஸாதுரக்ஷணத்திற்காகவே பகவானுடைய அவதாரம் என்று சிலர் கூறுவர். தேவர்களால் ப்ரார்த்திக்கப்பட்ட ராவண ஸம்ஹாரார்த்த மாகவே அவதரித்தருளினான் என்று சிலருடைய அபிப்ராயம். அவனுடைய ஸங்கல்ப்ப மாத்ரத்தினாலேயே ராவணனுடைய ஸம்ஹாரம் ஏற்படு மாகையாலும் ப்ரபத்தி ஸ்வரூபத்தை நிலைநிறுத்தும் காலத்திலேயே ஸாதுரக்ஷணமும் நேரிடுகிறதினாலேயும், சரணாகதி ஸ்வரூபத்தைப் பலகாலும் விசதமாக வெளியிடுவதற்காகவே முக்யமாக அவதரித்தருளினான் என்றே நிச்சயிக்க வேண்டும்.

ஸ்ரீ:

ஸ்ரீபாஷ்யகாரரின் திருநக்ஷத்ரம்.

(பத்ராதிபர்)

ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தி உலகத்தில் பரவச்செய்த பரமோதாரரான ஸ்ரீபாஷ்யகாரருடைய அவதார மஹோத்ஸவம் சென்ற சித்திரைமீ 16வ செவ்வாய்க்கிழமை வெகு விமரிசையாய் எல்லா திவ்யதேசங்களிலும் பகவத் ஸந்நிதிகளிலும் நடந்தேறியிருக்கும். இந்த உத்ஸவதினங்களில் வேதபாராயணமும் திவ்யப்பிரபந்த ஸேவையும் நடந்துவருவது வெகுகால வழக்கம். அவர் அவதரித்தது பிங்களஹு கலி 4039 சித்திரைமீ சுக்லதுவாதசியில் திருவாதிரை நக்ஷத்திரங்கூடின வெள்ளிக்கிழமையன்று. இது கி. பி. 1037-க்குச்சரியாயிருக்கும். இவர் எழுந்தருளியிருந்தகாலத்தில் நாடெங்கும் சீர்குலைந்து நாஸ்திக மதஸ்தர்களாலும் இன்னும் பலவித தான்தோன்றியான மதஸ்தர்களாலும் ஆக்ரமிக்கப்பட்டு எது நிஜம், எது பொய், என்று நிர்ணயிக்கமுடியாமல் தட்டித்தாவற்று ஜனங்கள் பலமுறைகளிலும் கஷ்டத்தை அனுபவித்து வந்தார்கள். வேதத்தை ஒத்துக்கொண்டும் ஒத்துக்கொள்ளாமலும் அனேக மதங்கள் தேசத்தில் பரவ ஆரம்பித்தன. தமோகுணம் நிறைந்த சிவனை பரதேவதை என்று ஒத்துக்கொண்டு கபாலத்தில் போஜனம் செய்து விபூதியைப் பூசிக்கொண்டு கள்ளைக்குடித்து யோனியில் தானிருப்பதாக தன்னை த்யானம் பண்ணிக்கொண்டு மோக்ஷத்தை அடைகிறான் என்று வெகு அறுவறுப்பான சைவமதத்தைச் சிலர் பரவச்செய்தார்கள். சிலர் தத்துவங்கள் 25 என்றும், அதில் 24 தத்துவங்களைக்காட்டிலும் 25-வது ஆன ஜீவாத்மா வேறென்றறிவது மோக்ஷமென்றும், மூலப்ரகிருதியிலிருந்து 24 தத்துவங்களும் உண்டாகிறதென்றும் சொல்லி பரமாத்துமாவே இல்லை என்று ஸ்தாபித்து ஒரு மதத்தைப் பரவச் செய்தார்கள். இன்னும் சிலர் ஈச்வரனை ஒப்புக்கொண்டு அதற்கு ஒரு அதிகாரமும் இல்லையென்று சொல்லி ஜகத்தானது ப்ரதானம் அல்லது மூலப்ரகிருதியிலிருந்து உண்டாகிறதென்றும் ஈச்வரன் நிமித்தகாரணம் என்றும் சொல்லி ஒரு மதத்தைப் பரவச்செய்தார்கள். இன்னும் சிலர் ஈச்வரன் ஒருவன் தான் ஸத்தியம், இந்தப் பிரபஞ்சங்களெல்லாம் பொய், மாயையால் ஸம்பந்தப்பட்டு ஈச்வரன் ஸகல சராசரங்களாக மாறி யிருக்கிறான், தத்வமஸி என்னும் வேதவாக்கியங்களால் இந்த ஜகத்தானது பொய் என்று தெரிந்தவுடன் இவன் பரமாத்மாவாக ஆய்விடுவான், இதுதான்

மோக்ஷமென்று ஒரு மதத்தைப் பரவச்செய்தார்கள். பகவான் நமக்கு கரணகளேபரங்களைக் கொடுத்தும் சாஸ்திரங்களைக் கொடுத்தும் நாம் நல்ல கதியை அடையவேண்டுமென்று ஒத்தாசை செய்திருந்தும் அதை மறந்து க்ருதக்னர்களாய் சிலர் அவனையே இல்லை யென்றார்கள். சிலர் ஒப்புக்கொண்டும் ஹீனஸ்திதியை அடைவித்தார்கள். இம்மதங்கள் பெரிய மஹரிஷிகளாலும் ப்ரும்மாவாலும் ஏற்படுத்தப்பட்ட படியால் ஜனங்கள் ப்ரமித்து இந்தப் போலி மதங்களை அவலம்பிக்க ஆரம்பித்தார்கள். இவ்விதம் ஜகத்காரணமான பரமாத்மாவை சிலர் அடியோடு இல்லையென்றும் சிலர் ஒப்புக்கொண்டும் அதின் குணம் விக்ரகம் விபூதி முதலான எல்லாவிதப் பெருமையையும் குலைத்து அந்தப் பரமாத்வை மிகவும் ஹீன ஸ்திதிக்கு கொண்டுவந்து கிணற்றில் விழுந்து கரையேறுவதற்குத் தாவில்லாமல் தவித்துக்கொண்டிருக்கும் ஒருவன் தசையை அடைந்திருக்கும்படி செய்தார்கள். அப்படிப்பட்ட நிலையில் இருந்த இந்தப் பரம்மத்திற்கு கைபிடித்துத் தூக்குவாரைப்போல்நம் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸகல கல்யாண குணங்களும் உண்டென்றும் ஜகத் காரணமென்றும் அதிஸுந்தர விக்ரகம் உள்ளவனென்றும் சரணாகதர்களைக் காப்பாற்றுகிறவன் என்றும் அவனே பரதேவதை என்றும் சகல பிரதிவாதிகளையும் ஜயித்துநம் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நம் நாட்டில் நிலைநிறுத்தி எங்கும் பரவச்செய்த மஹோபகாரத்தை ஸ்ரீ தேசிகன்

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

என்கிற சுலோகத்தால் அருளிச்செய்தார். (தாண்ட முடியாததான சைவமதமாகிற சேற்றையும், ஸாங்க்யர்களுடைய கல்பனையாகிற வலையையும், ப்ரசித்தமான ப்ரும்மாவினுடைய தந்தரமென்னும் யந்த்ரத்தின் மத்யத்தையும் தாண்டி குத்ருஷ்டிகளுடைய வஞ்சனையின் முகத்தில் அல்லது வாயில் விழுந்துகொண்டிருந்த பரப்ரும்மத்திற்குக் கைகொடுத்து ரக்ஷிப்பதில் ஸமர்த்தரான இந்த ராமானுஜ முனிவர் விளங்குகிறார்.)

[illegible]
[illegible]
[illegible] ॥

(அந்தகாரம் நிறைந்த இவ்வுலகத்தில் ஸ்ரீபாஷ்யகாரராகிய தீபம் ப்ரகாசிக்காத பக்ஷத்தில் இந்த ஜனங்கள் அஹங்காரமாகிய இருட்டையும் குயுக்திகளாகிய ஸர்ப்பங்களையும் குத்ருஷ்டிகளின் மதங்களாகிய பாதாளத்தையும் எப்படித் தாண்டிச் செல்வார்கள்.)

இவ்வித மஹோபகாரத்தைச் செய்த ஸ்ரீபாஷ்யகாரருடைய அவதார தினத்தில் அவர் செய்த உபகாரத்தை அநுஸந்தித்து க்ருதஜ்ஞதையைக் காட்டாவிட்டால் நாம் அவருடைய மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுவது தகுதியாகுமா? அம்மஹான் நாம் அநுஸந்திப்பதற்காகவே அநேக க்ரந்தங்களை அநுக்ரஹித்திருக்கிறார். அவருடைய கிரந்தங்களை வாசித்தாலொழிய அவர் பெருமை வெளிப்படாது. அவை ஸம்ஸ்க்ருதத்தில் இருக்கின்றன. ஸம்ஸ்க்ருதத்தை அடியோடு அநாதரிக்கும் இந்நாளில் அவைகளை படித்துத் தெரிந்துகொள்ளுவது அஸாத்தியமான காரியம். இருந்தாலும் ஒரு க்ரந்தத்தின் மூலத்தையாவது கொஞ்சம் பாராயணம் செய்வது ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவருக்கும் கடமையாகும். இவ்விதம் தற்காலத்தில் சில சில பெரியோர்களின் திருமாளிகைகளில் தவிர மற்ற எவ்விடத்திலும் பாராயணம் செய்வதைக் காணோம். இவ்விதம் பாராயணம் அவருடைய உத்ஸவ காலத்தில் ஒவ்வொரு ஸந்நிதிகளிலும் ஏற்படுத்தப்பட்டால் மிகவும் நன்றாய் இருக்கும். இவ்விதம் காஞ்சிபுரத்தில் ஸ்ரீ பிரதிவாதி பயங்கரமடத்தில் நடந்ததென்று கேட்க மிகவும் ஸந்தோஷமாக இருக்கிறது.

ஸ்ரீ:

இரண்டாந்திருவந்தாதி.

186751

(ஸ்ரீ. உப. வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர்.)

18

50. அழைப்பன் திருமாலை யாங்கவர்கள் சொன்ன
பிழைப்பில் பெரும்பெயரே பேசி - இழைப்பரிய
ஆயவனே ! யாதவனே ! யென்றவனை யார்முகப்பும்
மாயவனே ! யென்றும் மதித்து.

(இ-ள்.) இழைப்பு அரிய ஆயவனே என்றும் - (எவராலும்) ஸ்வ யத்நத்தால் காண அரியனாகிப் (பெண் பிறந்தாரைப் புண்படுத்தும்) இடையனானவனே ! யென்றும், யாதவனே என்றும் - யதுகுலத்தில் வசுதேவர் மகனாகப் பிறந்தவனே ! என்றும், மாயவனே என்றும் - (குணசேஷ்டிதங்களாலே) ஆச்சர்யகரனாயிருப்பவனே ! என்றும், மதித்து - மனத்திற்கொண்டு,— ஆங்கு அவர்கள் சொன்ன - திருவாய்ப்பாடியிலுள்ள அந்த இடைப்பெண்கள் சொல்லியதாய், பிழைப்பு இல் - (உள்ளீடாயிருக்கிற குணசேஷ்டிதங்களின் இனிமையால் அனுஸந்தித்தார்க்குப்) பிழைக்க அரிதாம்படியிருப்பதான, பெரும்பெயரே - (இரண்டு மூன்று அக்ஷரங்களையுடையதாயிருந்தாலும் ஈடுபாட்டினாலே யுண்டாகிற மனக்குழைவால் சொல்லிமுடிக்க முடியாத), பெருமையுடைய அப்பெருமான் திருநாமங்களை, பேசி - சொல்லி, யார்முகப்பும் - (உகப்பாரோடு உகவாதாரோடு வாசியற) எல்லார் முன்பும், திருமாலை அவனை - ச்ரிய: பதியான அந்த ஸர்வேச்வரனை, (அந்த இடைப்பெண்களுக்கு இரங்கினாற்போல நம்மிடத்தும் இரங்கக்கூடுமென்று கருத்தினாலே), அழைப்பன் - கூப்பிடாநின்றேன், (எ - று).

கீழ்ப்பாசுரத்தில் எம்பெருமானை அழைக்கும்படி தம்நெஞ்சை நியமித்த ஆழ்வார், திருவாய்ப்பாடியிலுள்ள பெண்கள் அன்பின் மிகுதியினாலே அவன் திருநாமங்களைத் தளர்த்தித்தோற்றச் சொல்லுமாப்போலே தம் நெஞ்சுக்கு முன்னே தாம் முற்பட்டு ப்ரேமபாரவச்யத்தாலே தளர்த்தித்தோன்றக் கூப்பிடுகின்றாரென்க. (௫0)

51. மதிக்கண்டாய் நெஞ்சே! மணிவண்ணன் பாதம்
மதிக்கண்டாய் மற்றவன்பேர் தன்னை—மதிக்கண்டாய்
பேராழி நின்று பெயர்ந்து கடல்கடைந்த
நீராழி வண்ண னிறம்.

(இ-ள்) நெஞ்சே - மனமே! மணிவண்ணன் பாதம் - நீலமணிபோலே (தன்னைத் தரிசிப்பவரின் தாபத்தைப் போக்கிச் சிரமஹரமான) திருமேனிநிறத்தையுடையனான பெருமானது திருவடிகளை, மதிக்கண்டாய் - எப்போதும் புத்தியிற்கொள்வா

யாக; மற்று - பின்னும், அவன் - அந்த ஸர்வேஶ்வரனுடைய, பேர்தன்னை - (அவ்வடிவழகுக்கு வாசகமான) திருநாமத்தை, மதிக்கண்டாய் - ; பேர் ஆழி பெயர்ந்து நின்று - (பெருவடிவுபடைத்த அப்பெருமான் பள்ளிக்கொள்ளுகைக்குத் தகும்படி) பெரிய திருப்பாற்கடலினின்றும் இடம் விட்டுப் பெயர்ந்து எழுந்திருந்து நின்று, கடல் கடைந்த - (ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களின் வேண்டுகோளைத் தலைக்கட்டுவதற்காக) அந்தக்கடலைக் கடைந்த, நீர் ஆழி வண்ணன் - நீரையுடைய கடலைப்போன்ற திருநிறத்தையுடையவனது, நிறம் - திருநிறத்தை, மதிக்கண்டாய் - (தேவர்களைப் போலே உப்புச்சாற்றை விரும்பிப்போகாமல்) புத்தியிற்கொண்டு அனுபவிக்கப் பார், (எ - று.)

தாம் ஸர்வேச்வரனிடத்துக்கொண்ட ஈடுபாட்டை யநுசந்தித்த ஆழ்வார், தம் முடைய மனத்தை நோக்கி, 'நீ என்னைப்போலே அப்பெருமான் விஷயத்திற் கலங்கித் தளர்ந்து அவஸ்தைப்படாமல் முதலில் தானே அவனுடைய சௌந்தரியம் முதலியவைகளை மனத்தெளிவோடு அநுசந்திப்பாயென்று உபதேசிக்கின்றனரென்க. (ருக)

52. நிறங்கரியன் செய்ய நெடுமலராள் மார்வ
னறம்பெரிய னா ரதறிவார்—மறம்புரிந்த
வாளரக்கன் போல்வானை வானவர்கோன் றானத்து
நீளிருக்கைக் குய்த்தா னெறி.

(இ - ள்) நிறம் கரியன் - (தன்னை ஆச்ரயித்தவர்களின் ஸகல தாபங்களையும் போக்கும்படி) கறுத்த திருநிறத்தையுடையவனும், செய்ய நெடு மலராள் மார்பன் - (அந்தக் கருநிறத்துக்கு ஒரு மேனி கொடுக்கும்படியான) செந்நிறத்தை யுடையளாய்ப் பெரியதாமரைப்பூவை யிருப்பிடமாகவுடையளான பெரிய பிராட்டியாரைத் திருமார்பிலே யுடையவனும், அறம் பெரியன் - (அந்தப் பெரிய பிராட்டியாரின் நித்ய யோகத்தாலே) தயை விஞ்சியிருப்பவனும்,— மறம் புரிந்த வாள் அரக்கன் போல்வானை - (பத்தினியைப் பிரிக்கையாகிற) கொடுஞ்செயலைச் செய்த ஆயுதத்தைக்கொண்ட இராவணனோடொத்திருந்துள்ள மகாபலிசக்ரவர்த்தியை, வானவர்கோன் தானத்து நீள் இருக்கைக்கு - தேவேந்திர பதவியில் வெகுகாலம் இருக்கும்படி செய்வதற்காக, உய்த்தான் - (பாதாளலோகத்தில் வசிக்குமாறு வைத்தவனை) ஸர்வேச்வரனுடைய, நெறி அது - அந்தக் கருணையின்படியை, ஆர் அறிவார் - ஆர்தான் அறிவார்கள்? [ஒருவராலும் அறியமுடியாதென்றபடி]; (எ - று.)

தம் மனத்தைநோக்கி உபதேசிக்க வல்லரான தம்மையும் கலங்கப்பண்ணின ச்ரிய: பதியினுடைய வடிவழகையும் பெரியபிராட்டியார் ஸம்பந்தத்தால் அப்பிரமனுக்கு வந்துள்ள மிக்க க்ருபையையும் அநுஸந்தித்த ஆழ்வார் இதனால், அப்பிரமனுடைய க்ருபாகுணத்தை யுள்ளபடி யறிந்து பேசுதல் எவராலும் முடியாதென்கிறார்.

காளமேகத்திலே மின்னுக்கொடி படர்ந்தாற்போலத் தன் திருமார்பிலே க்ருபாருபையான பெரிய பிராட்டி அமர்ந்திருக்கையாலே 'ஆந்ருசம்ஸ்யம் பரோதர்ம என்கிறபடியே பரமதாமமான க்ருபையைப் படைத்தவனாகிய எம்பெருமான், தேவர்களுக்குத் தீங்குபுரிவதில் ராவணனோடு ஒத்திருக்கையாலே மகாபலிசக்ரவர்த்தியும் கொல்லத்தக்கவனேயாகிலும் அவன் பக்கலில் ஔதார்யமென்ற ஒருகுணம் கிடக்கையாலே அவனை இந்திரபதத்திற் செலுத்துவதாகப் பாதாளலோகத்திலே வைத்தான். அவனுடைய க்ருபாப்ரகாரத்தை அறிந்து பேசுதல் மிகவும் அதிசயித ஜ்ஞானவான்களுக்குத்தான் கூடுமோ? எவ்வளவு அதிசயித ஜ்ஞானவான்களாலும் அவனுடைய க்ருபாப்ரகாரத்தை அறிந்துபேச முடியாதென்றவாறு. ஏழாவது மந்வந்தரமாகிய இந்த வைவஸ்வத மந்வந்தரத்திலே வாமனனாய் வந்து இரந்த ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கு த்ரைலோக்யத்தையும் தானம்பண்ணிப் பாதாளலோகத்தில் வாழ்கின்ற பலிசக்கரவர்த்தி எட்டாவது மந்வந்தரமாகிய ஸாவர்ணி மந்வந்தரத்திலே அந்தத் திருமாலினருளால் இந்திரபதவியைப் பெறுவானென்று புராணங்களிற் காணப்படும் விஷயம் இங்கு உரைக்கத்தக்கது. இனி, வாளரக்கன் போல்வானை வானவர்கோன் தானத்து நீளிருக்கைக்கு உய்த்தான் என்ற தொடர்க்கு— இராவணனோடொத்திருந்துள்ள மஹாபலியை ஔதார்ய குணத்தோடு ராஜ்யத்தைப் பாதுகாத்தவன் இழுக்குப்படுவது என்? என்று தன்னுடைய க்ருபாகுணத்தாலே தேவேந்திரனுடைய ஸ்தானமான ஸ்வர்க்கம்போலே விலக்ஷணமாயிருக்கிற பாதாளலோகத்திலே அவ்விந்திரன் ராஜ்யத்தைப் பறிகொடுத்து கண் பிசைந்துகொண்டு நிற்பதுபோல நிற்க வேண்டாதபடி பெருமகிழ்ச்சியோடே நெடுங்காலம் வாழுமாறு செய்துதந்தவ னென்று உரைகூறினாரு முளர். (ருஉ)

53. நெறியாற் குழற்கற்றை முன்னின்று பின்றாழ்ந்
தறியா திளங்கிரியென் றெண்ணிப்—பிறியாது
பூங்கொடிக்கள் வைகும் பொருபுனற் குன்றென்னும்
வேங்கடமே யாம்விரும்பும் வெற்பு.

(இ - ள்.) 'நெறியார் - (திருமலையை யுத்தேச்யமாகக்கொண்டு மற்றொன்றறியாமல் உடம்பசைத்தலும் மூச்சு விடுதலுங்கூட இல்லாமல் நெடுங்காலமாக வழியடிமையாகிற நன்னெறியைக்கொண்ட பக்தர்களுடைய, குழல்கற்றை - கற்றையாயிருக்கிற கூந்தலின், முன் - முன்புறத்தே, நின்று - முளைத்துநின்று, பின் தாழ்ந்து - பின்புறமளவும் வளர்ந்து தாழ்ந்துவிழுந்து, அறியாது - (சேதநரின்குழற்கற்றையென்று) அறியாமல்— இளங் கிரி என்று எண்ணி - பெரியமலையின் உறுப்பாகிய சிறியமலையாகு மென்று (மாறாக) நினைத்து, பிறியாது - (அவ்விடத்தைவிட்டு) நீங்காமல், பூங்கொடிக்கள் வைகும் - (கண்ட இடங்களிலெல்லாம்) பூநிறைந்துள்ள கொடிகள் நித்யவாசஞ்செய்யப் பெற்றதும், பொரு புனல் - அலைமோதும்படி ஜலஸம்ருத்தியையுடையதுமான, குன்று - மலையாம், என்னும் - என்றுப்ரஸித்தமான, வேங்கடமே - திருவேங்கடமலையே, யாம், விரும்பும் ப்ராப்யமாகப் பற்றிநிற்கும், வெற்பு - மலையாகும்; (எ - று.)

கீழ் அருளிச் செய்தபடி ஆஸுரப்ரக்ருதிக ளிடத்திலும் அநுக்ரஹசீலனான ஸர்வேச்வரன் ஸர்வர்க்கும் கண்ணாலே காணலாம்படிவந்து நித்யவாஸம் பண்ணுகிற

மலையே நாங்கள் ப்ராப்யமாகப் பற்றுவ தென்கிறார். திருவேங்கடமலையையே உத்தேச்யமாக அநுஸந்தித்து த்யானிக்கின்ற ஸந்மார்க்க சீலர்கள் தாம் ஓரிடத்திலே உடம்பசைதலும் மூச்சுவிடுதலுங்கூட இல்லாமல் பர்வதம்போல ஸ்தாவரப்ரதிஷ்டையாக இருந்து த்யாநிப்பதனால் அவர்கள் குழற்கற்றைமீது பூங்கொடிகள் முளைத்து வளரும்படி நிற்கின்ற தென்றும், அலைமோதுமாறு ஜலஸம்ருத்திவாய்ந்த தென்றும், திருவேங்கடமலையின் சிறப்பை முதல் மூன்றடிகளினால் கூறினார். மனவுணர்ச்சி யில்லாத கொடிகட்கு மனவுணர்ச்சி யுள்ளதாகக் கூறியது - மரபு வழுவமைதி. (ருங)

54. வெற்பென் றிருஞ்சோலை வேங்கடமென் றிவ்விரண்டு
நிற்பென்று நீமதிக்கு நீர்மைபோல் - நிற்பென்
றுளங்கோயி லுள்ளம்வைத் துள்ளினேன் வெள்ளத்
திளங்கோயில் கைவிடே லென்று.

(இ - ள்,) இருஞ் சோலை (என்று) - திருமாலிருஞ்சோலையென்றும், வேங்கடம் என்று - திருவேங்கடமென்றுஞ் சொல்லப்படுகின்ற, வெற்பு என்ற இவ்விரண்டும்-திருமலைகளாகிய இவ்விரண்டு ஸ்தானங்களும், நிற்பு என்று - உகந்து வாழ்கின்ற வாஸஸ்தாநமென்று நினைத்து, நீ — மதிக்கும் - ஆதாரஞ்செய்கின்ற, நீர்மைபோல் - தன்மைபோல, உளம் கோயில் - (என்னுடைய மனமாகிற) கோயிலும், நிற்பு என்று நீ - (உகந்து) வாழ்கின்ற இடமாகுமென்று, உள்ளம் வைத்து - புத்திபண்ணி, (பின்புநீ என்னுள்ளத்திற் செய்கின்ற அபிநிவேசாதிசயத்தைக்கொண்டு), (அந்தத்திருமலைகளைப்போல நிற்கும்படி என்மனம் இருந்துமளவும் வாஸஸ்தானமாகக்கொண்டதான), வெள்ளத்து இளம்கோயில் இருப்பாற்கடலாகிற பாலாலயத்தை (விட்டு விடுகிறாயோ என்று அஞ்சி என் க்ருதஜ்ஞதை தோன்றுமாறு), கைவிடேல் என்று - கைவிடாதொழிய வேணுமென்று, உள்ளினேன் - ப்ரார்த்தித்தேன்; (எ - று).

இவ்வாழ்வார் திருமலையை விரும்பப் புக, எம்பெருமான் அவற்றிலுள்ள விருப்பத்தைக் குறைத்து அந்நசைகளையெல்லாம் இவருடைய திருவுள்ளத்திலே வைத்து நிரந்தரவாசஞ்செய்யப்புக, இவர் திருமலைகளிற் செய்யும் ஆதரத்தைத் தம்முடைய மனத்திலே எம்பெருமான் செய்ததற்குக்காரணமாயிருந்த திருப்பாற்கடலினிடத்துத் தாம் க்ருதக்நராகாமலிருக்குமாறு செய்நன்றி பாராட்டி, பிரானே ! நீ என் பக்கல் வருவதற்கு க்ருஷிபண்ணின அந்தத் திருப்பாற்கடலில் ஆதரத்தை ஒழியாமலிருப்பாயாகவென்று ப்ரார்த்திக்கிறேனென்று உகப்புடன் கூறுகிறார். இளங்கோயில் - பாலாலயம். உள்ளினேன் - இயல்பினால் நிகழ்காலம் இறந்த காலமாக வந்த காலவழுமைதி. திருப்பாற்கடலைக்கூறினது, திருமலைகட்கும் உபலக்ஷணம். (ருச)

55. என்று மறந்தறியே னேழ்பிறப்பு மெப்பொழுது
நின்று நினைப்பொழியா நீர்மையால்—வென்றி
யடலாழி கொண்ட வறிவனே ! இன்பக்
கடலாழி நீயருளிக் காண்.

(இ - ள்.) வென்றி-(ப்ரபலப்ரதிபந்தகங்களை எளிதிற்போக்குகையால்வரும்) வெற்றியையுடைய, அடல் - போர்செய்யவல்ல, ஆழி - திருவாழி யாழ்வானை, கொண்ட - (விரோதிகளை த்வரையிற் போக்கவேணுமென்ற கருத்தாலே எப்போதுங்கையிற்கொண்டிருப்பவனாய், அறிவனே - அஜ்ஞாந அசக்திகளுக்கு இருப்பிடமான என்னால் உன்னைப் பெறுதல்முடியாது, ஜ்ஞாந சக்திகளாற் குறைவற்ற உன்னாலே தான் உன்னைப் பெறவேணும், என்ற விஷயத்தை) நன்குஉணர்ந்திருக்கிற ஸர்வஜ்ஞனே ! நீ—, ஏழ்பிறப்பும் - (மக்கள் தேவர் நரகர் புள் ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்று சொல்லப்பட்ட) ஏழுவகையாகவுள்ள எல்லா ஜந்மங்களிலும், எப்பொழுதும் - எல்லா நிலைமைகளிலும், நின்று - எதிர் சூழல்புக்குநின்று நினைப்பு - (இவன் நம்மைப்பெற வேணுமென்று) நினைக்கின்ற நினைப்பை, ஒழியா - (ஒருநாளும்) மாறுமற் கொண்டிருக்கிற, நீர்மையால் (உன்னுடைய) ஸ்வபாவத்தாலே, என்றும் - எந்தக்காலத்திலும் மறந்து அறியேன் - (அடியேன் தேவரீரை மறந்தறியமாட்டேன் ; நீ ; (பேற்றுக்கு உறுப்பான ஜ்ஞாநத்தைத் தந்த) நீ, இன்பம் கடல் ஆழி - (அந்த ஜ்ஞாநத்தின் பலமாக ஒருதேச விசேஷத்திலேபோய்ப் பரிபூர்ணமாக உன்னை யனுபவித்துத் தோன்றக்கூடிய) பேராநந்தமாகிய மஹா ஸமுத்ரத்தை, அருளிக்காண் - (அடியேனுக்குத்) தந்தருளவேணும் ; (எ - று.)

நாட்டிலுள்ளார் ச்ரவண மநந நிதித்யாஸநங்களைச் செய்து அதன்பிறகு உபாஸனையாகிற நிரந்தராநு ஸ்மிருதியால் உன்னை மறவாமல் த்யாநிப்பார்கள் ! எனக்கே அவ்வண்ணம் ஒன்றுமில்லை, "எதிர் சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கேயருள்கள் செய்ய' என்கிறபடியே, என்னுடைய எல்லா ஜந்மங்களிலும் எல்லாக்காலங்களிலும் நீ நின்று 'இவன் நம்மை மறவாமற் பெற்றிலோனாக வேணும்' என்று ஸங்கல்பித்ததனால் உன்னை நினைக்க அரியதான ஸம்ஸாரத்திலே உன்னை மறவாமலிருக்கும்படியான ஜ்ஞாநலாபத்தைப் பெற்றதனோடு நீ என்பக்கல் திருப்பதிகளிற்பண்ணும் விருப்பத்தைச் செய்யுமாறு ஆகப்பெற்றேன். ஜ்ஞாந சக்திகளாற் குறைவற்றிருக்கிற நீயே அந்த ஜ்ஞாநத்துக்குப் பயனாக உன்னை யடைந்தால்வரும் பரமாநந்தத்தையும் பண்ணித் தந்தருளவேணு மென்கிறார். கடலாழி - மீமிசைச்சொல். (ருரு)

56. காணக் கழிகாதல் கைமிக்குக் காட்டினால்
நாணப் படுமென்றா னாணுமே - பேணிக்
கருமாலைப் பொன்மேனி காட்டாமுன் காட்டும்
திருமாலை நங்கள் திரு.

(இ - ள்.) காண -(மனஸ்ஸினால்) காணக்காண, கழி-பழையநிலைகழிந்து மேன்மேல் வளர்ந்துவருகிற, காதல் - அன்பானது, கைமிக்குக் காட்டினால் - வரம்புகடந்துதோன்றினால், நாணப்படும் என்றால் (அவனேவந்து மேல்விழுமளவும் நாம் பதருகை ஸ்வரூபஹானியென்று நினைத்து) லஜ்ஜித்து (ஓரிடத்தே) ஒதுங்கியிருத்தல் தகுமென்று ஆராய்ந்துசொன்னால், நாணுமே - (அப்படி முறைபார்த்து) ஆறியிருக்கப்போமோ ? (மேலும்) கரு மாலை - (ச்ரமஹரமாம்படி) கறுத்ததிருமேனி நிறத்தையுடைய ஸர்வாதிகனாகிய

திருமாலை - ச்ரிய: பதியானவனை, பொன் மேனி காட்டா முன் (அப்பெருமான் தனது) அழகிய திருமேனியைக் காட்டுவதற்குமுன்னம், நங்கள் திரு - நமக்கு ஸ்வாமியான பெரிய பிராட்டியார், பேணி - ஆதரித்து, காட்டும் - காட்டாநிற்பாள்; (எ - று.)

'எம்பெருமானாலே பேறு' என்று நிச்சயித்தபின்பு அவன் அருளும்போது அருளுகிறானென்று ஆறியிராமல் இன்பக்கடலாழி நீ யருளிக்காண் என்று நிர்ப்பந்திக்கலாமோ? சேஷபூதனான ஸ்வரூபத்துக்கு இது தகுமோ? ஒரு ஆசங்கைதோன்ற எம்பெருமானிடத்து பக்திவிஞ்சினால் ஆறியிருக்கப்போமோ? மேலும் நம்முடைய குற்றத்தைக்கண்டு பெருமான் தன்னைக்காட்டுவதற்குப் பின்வாங்கினநிலையிலும் அப்பெருமானிடத்து நம்முடைய குற்றத்தைப் பொறுப்பிக்குமாறு புருஷகாரஞ்செய்கின்ற பெரிய பிராட்டியார் நமக்கு அப்பரமனைக்காட்டுவதாக நிற்றலாலும் நம்மால் ஆறியிருக்கப்போகாதென்கிறார். திருமாலைக் காணக்கழி காதலென்று இயைத்து- திருமாலைக்கண்டாலல்லது கழியாதகாதலென்று பொருள் கூறுவதுமுண்டு. (௫௬)

57. திருமங்கை நின்றருளுந் தெய்வ நாவாழ்த்துங்
கருமங் கடைப்பிடிமின் கண்டீ - ருரிமையா
லேத்தினோம் பாத மிருந்தடக்கை யெந்தைபேர்
நாற்றிசையுங் கேட்டீரே நாம்.

(இ - ள்.) இரு தட கை எந்தை - பருத்து வளர்ந்த திருத்தோள்களைப் படைத்த என் ஸ்வாமியினுடைய, பேர் - திருநாமங்களை, நால் திசையும் - நான்காகிய திக்கிலுள்ளீரெல்லீரும், கேட்டீரே - கேட்டிருக்கிறீர்களல்லவா? (அப்படிப்பட்டவனுடைய), பாதம் - திருவடிகளை உரிமையால் - (நமக்கு ஸர்வேச்வரன் ப்ராப்தமான சேஷியாவன் என்கிற) முறையால் (அவ்வெம்பெருமானைப் பற்றுகைக்கு ஈடான நன்மைகளொன்றுமில்லாத) நாம் ஏத்தினோம் - துதித்தோம், (ஆகையால் நால்திசையிலுமுள்ள எல்லீரும்), திருமங்கை - (ஸ்வஸம்பந்தத்தாலே பகவானுக்கு ஸர்வோத்கர்ஷத்தையுமுண்டாக்கவல்ல ஸ்வபாவத்தை யுடையவளாய்) போகயோக்யையான பெரியபிராட்டி, நின்று அருளும் - (இறையும் அகலகில்லேன் என்று) இடைவிடாமல் (தன்மார்பில்) வாழும்படியிருக்கிற, தெய்வம் - ஸர்வாதிகனானவனை, நா வாழ்த்தும் கருமம் - நாவினாலே தோத்திரஞ்செய்கையாகிற காரியத்தை, கடைப்பிடிமின் கண்டீர் - ஒருப்படுங்கள்; (எ - று.)

கீழ் அருளிச்செய்தபடி புருஷகாரபூதையான பெரியபிராட்டியாரோடே கூடியிருந்துள்ளவனே யாவராலும் அடையத்தக்கவன்; அவனை சேஷியென்ற ஒரு முறையைக்கொண்டு என்னிடத்து எந்தவகையோக்யதையில்லாமற்போயினும் அவன் திருவடிகளைத் துதித்தேன்; அவனுடைய வாத்ஸல்யாதி குணங்களைத் தோற்றுவிக்கிற திருநாமங்களைக் கேட்டிருந்துள்ள நீங்களும், என்பேச்சை ஓலக்கவார்த்தையென்று அசட்டை செய்யாமல் அப்பரமனை வாழ்த்துந்தொழிலில் மூளுங்களென்று நாற்றிசையிலும் உள்ளவர்களுக்கு உபதேசிக்கிறார். 'கடைப்படுமின்' என்று பாடங்கொண்டு கருமங்கடை - காரியத்திலே, படுமின் - மூளுங்களென்று உரை கூறுவாருமுளர். (௫௭)

58. நாம்பெற்ற நன்மையும் நாமங்கை நன்னெஞ்சத்
தோம்பி யிருந்தெம்மை யோதுவித்து - வேம்பின்
பொருணீர்மை யாயினும் பொன்னாழி பாடென்
றருணீர்மை தந்த வருள்.

(இ - ள்) (இப்போது இருப்பதுபோல இனிமையாக இராமல்) வேம்பின் பொருள் நீர்மை ஆயினும் - வேம்பாகிய பண்டத்தின் தன்மைபோலே (எம்பெருமானையேத்துகையாகிற இது மிகவும் மனத்துக்குக் கசப்பையுண்டாக்குவதாக) இருந்ததேயானாலும், பொன் ஆழி - (அந்தப்பரமனுடைய) பொன்போல விரும்பத்தக்கத் திருவாழியுங்கையுமான அழகை, பாடு - பாடுவாயாக, என்று,— நாமங்கை - நாக்கிலிருக்கும் மடந்தையாகிய ஸரஸ்வதீதேவி, நல் நெஞ்சத்து - (என்னுடைய) நல்ல மனத்திலே, எம்மை - நம்மை, ஓம்பியிருந்து - அநுவர்த்தித்துக்கொண்டிருந்து, ஓதும்படி செய்ததினாலே, நாம் பெற்ற நன்மையும் - நாம் பெறாப்பேறாகப்பெற்ற (எம்பெருமானை யேத்துகையாகிற இந்தப்பரம) புருஷார்த்தமும், அருள் நீர்மை - கருணைபுரிவதையே ஸ்வபாவமாகவுடையனான ஸர்வேச்வரன், தந்த - நிர்ஹேதுகமாக (என்னளவிற்) செய்த, அருள் - திருவருளினால் விளைந்ததாகும்; (எ - று.)

'கீழ்ப்பாசுரத்தில் 'ஏத்தினோம்பாதம்' என்று அருளிச்செய்கையாலே 'இவ்வனம் ஏத்தும்படியாகைக்குக் காரணம் என்? என்று ஓராசங்கை யுண்டாக, 'அவ்வனம் ஆனதற்குக் காரணம், நாமகளாகிய சரசுவதிதேவி அடியேனது மனத்திலிருந்து சொல்விப்பதனாலாகும், அதற்கும் மூலகாரணம் க்ருபாரூபியான எம்பெருமானது திருவருளே யென்கிறார். கொண்டகணவன் இன்னாதவைற்றையே செய்யினும் குலமகட்கு அவனையன்றி வேறுகதி இல்லாதவாறுபோல ஸர்வசேஷியான எம்பெருமான் மிகவும் இனியவனாயில்லாமல் மிக இன்னாதவனாயிருப்பினும் அவனை விரும்பவேணுமென்ற கருத்து, 'வேம்பின் பொருள் நீர்மையாயினும் பொன்னாழி பாடு' என்ற தொடரில் வெளியாம். திருமங்கைமன்னன் இவ்விஷயத்தைக் குறிப்பித்தற்காகவே "வேம்பின் புழு வேம்பன்றி யுண்ணாதடியேன், நான் பின்னுமுன் சேவடியன்றி நயவேன்" என்று எம்பெருமான் சேவடிக்கு வேம்பை யுவமை கூறியிருத்தல் காண்க. அருள் நீர்மை - வினைத்தொகையின் மொழி; வேற்றுமைத் தொகையின் மொழியுமாம். (௫௮)

59. அருள்புரிந்த சிந்தை யடியார்மேல் வைத்துப்
பொருள்தெரிந்து காண்குற்ற வப்போ—திருடிரிந்து
நோக்கினே னோக்கி நினைந்தேன தொண்கமல
மோக்கினே னென்னையுமங் கோர்ந்து.

(இ - ள்.) அருள் புரிந்த சிந்தை - (கருணைபுரிந் தல்லது வெறுமனே நிற்கமாட்டாதபடி) க்ருபையையே கொண்டிருக்கிற தேவரீருடைய திருவுள்ளத்தை, அடியார் மேல் - (தேவரீரருளுகைக்குப் பாத்ர பூதரான என்போல்வாரான) அடியவர்களின் மேலே, வைத்து—, பொருள் தெரிந்து - (எங்களை) ஒரு வஸ்துவாக எண்ணி, காண்குற்ற - கடாக்ஷிக்கிற, அப்போது - அந்த வேளையில், இருள் திரிந்து - அஜ்ஞானமாகிற இருளெல்லாம் போன இடம் தெரியாதபடி சிதறிப்போகையால், நோக்கினேன் —

(தேவரீர் சேஷி, நான் சேஷபூதன் என்று இருவருடைய ஸ்வரூபத்தையும்) தெளிய வறிந்தேன்; நோக்கி (இவ்வனம் இருவருடைய தன்மையையும் உள்ளபடி யறிந்து, ஒண் கமலம் அது அழகியதாமரை மலர்போல போக்யமான (தேவரீரது) அந்த திருவடியிணையை, நினைந்தேன் - (பரமப்ராப்யமென்று) அநுஸந்தித்தேன்; என்னையும் - (ஸ்வரக்ஷணத்தில் முயல்வதற்கு உரியனல்லாத) என்னையும், ஓர்ந்து - உள்ளூர ஆராய்ந்து, அங்கு ஒக்கினேன் - (என்னைப்பெறுகைக்குத் தானே உபாயமான) அந்தத்திருவடிகளிலே ஸமர்ப்பித்தேன்; (எ - று).

எம்பெருமானைத்தாம் பாடுமாறு நாமகள் தம்முடைய இதயத்திலே யிருந்து செய்ததற்குக் காரண கருணாமூர்த்தியான அவனது திருவருளே யென்று கீழ்ப்பாசுரத்தில் அநுசந்தித்த ஆழ்வார் அந்த நிர்ஹேதுகமான க்ருபை தமக்கு உண்டாகுமாறு ஜாயமான காலத்தில் அவன் கடாக்ஷித்தபடியை இங்கு அருளிச்செய்கிறார்: அடியவர்களின்மீது க்ருபாபூர்ணமான திருவுள்ளத்தோடே தேவரீர் கடாக்ஷிக்குமாப்போலே அடியேனையும் ஒரு பொருளாக எண்ணிக் கடாட்சிக்க, அதனால் அடியேன் அஜ்ஞானம் நீங்கி நன்கு ஆராய்ந்து பார்க்கையில் என்னுடைய ரக்ஷணத்தில் எனக்கு அந்வயமில்லாதபடி ஆத்மா பரதந்த்ரமாக இருக்கையாலே அடியேனை ஸ்வப்ராப்தியில் ஸ்வயமே உபாயமாகும் தேவரீர் திருவடிகளிலே சமர்ப்பித்தே னென்றவாறு. முதலிரண்டடிகட்கு அருளிலே நோக்கான தேவரீருடைய திருவுள்ளத்தை அடியவர்மீது வைத்தருளுகையாலே, அடியோங்கள் பதார்த்தங்களின் உண்மையை யுணர்ந்து காண்கின்ற வல்லமையை யடைந்து காண்கின்ற சமயத்தி லென்று உரைத்தலுமொன்று. "அருள்புரிந்த சிந்தை யடியார்மேல் வைத்து' என்பது, வ்யாக்யாதாக்கள் கொண்ட பாடமாக இருக்கலாமென்று தோன்றுகின்றது. (ருக)

60. ஒருருவனல்லே யொளியுருவ நின்னுருவ
மீருருவ னென்ப ரிருநிலத்தோ—ரோருருவ
மாதியாம் வண்ண மறிந்தா ரவர்கண்டீர்
நீதியால் மண்காப்பார் நின்று.

(இ - ள்.) (நீ) ஓர் உருவன் அல்லை - என்றும் ஒருபடிப்பட ஸ்வதந்த்ரமாக இருக்கிற வடிவத்தையுடைய வனல்லை; நின் உருவம் - உனக்கு நிலை நின்ற வடிவமாவது,— ஒளி உருவம் - (உன்னை ஆச்ரிதர்க்கு ஸ்வாதீனமாக்கி அத்தாலே) ஒளிபெற்ற வடிவமாகும், (இப்படி ஆச்ரித பாதந்த்ரனுக இருக்கிற உன்னை), இரு நிலத்தோர் - (இந்த ஆச்ரித பாரதந்த்ரியத்தி னேற்றத்தை யுணராத) பெரிய இந்நிலவுலகத்திலுள்ள சாமானிய மனிதர், ஈர் உருவன் என்பார் - (நிரங்குசஸ்வாதந்த்ர்யமாகிற) பெரிய வடிவத்தையுடையவ னென்று (உன்னைக் குறித்துச்) சொல்வார்கள்; ஓர் உருவம் - (ஆச்ரித பரதந்த்ரனுயிருக்கையாகிற) ஒப்பற்ற (உனது) வடிவமே, ஆதி ஆம் - (எல்லாருடைய ஸத்தைக்கும் காரணமாய் நின்று ஆச்ரிதர் உஜ்ஜீவநத்துக்குக்) காரணமாக இருக்கின்ற, வண்ணம் - வகையை, அறிந்தார் அவர்கண்டீர் - உள்ளபடி யுணர்ந்தவர்களான அம்மஹான்களே, (ஈச்வரன் எளியவ னென்கிறவரைப்போலவன்றி அவனுடைய ஸௌலப்ய குணத்தைப் பலரும் அறியச்சொல்லி), நீதியால் நின்று - (யாவரையும் எம்பெருமானிடத்து ப்ரவணராம்படி செய்கிற) நேர்வழியிலே நின்று, மண் காப்பார் - இவ்வுலகத்தாரை உஜ்ஜீவிக்கச் செய்வாகள்; (எ - று.)

இன்னும்வரும்)

1 'ந க்ஷமாமி', 2 'க்ஷிபாமி' என்னும்படி துறப்புண்டு, அநந்தாயாம விஸ்தாரமான த்ரிகுணஸம்ஸாரகாந்தாரத்திலே அநேகஜந்மஸாஹஸ்ரியான ஸம்ஸாரவ்ருஷ்டியை அடைந்து, அநாவிதவிஷயம்ருகத்ருஷ்ணிகாஸ்வாத லுப்தனாய், அடி தெரியாதே யோடி வாஸநாரேணுகுண்டிதனாய், விபரீதபரிச்ரமபலனாய், ஒரு விச்ரமஸ்தாந

அறியத்தக்கது. ந க்ஷமாமி - பொறுக்கமாட்டேன். அதாவது 3 'பத்மபத்ர ஸஹஸ்ரேணாபி ந க்ஷமாமி வஸுந்தரே' என்றும், 'உபசாரஸஹஸ்ரேணாபி ந க்ஷமாமி வஸுந்தரே' என்றும்சொல்லப்பட்டதிறே. க்ஷிபாமி - (நரகத்திலேயே) தள்ளுகிறேன், அதாவது 4 'க்ஷிபாம்யஜஸ்ரமசுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு' என்றபடி. என்னும்படி- என்று ஸங்கல்பிக்கும்படி. துறப்புண்டு - நிக்ரஹிக்கப்பட்டு. அநந்த - அளவில்லாத, ஆயாம - நீளம், விஸ்தாரமான - அகலம், இவைகளை உடைத்தானதான, அதாவது சுத்த ஸத்வமயமான த்ரவ்யம் இருக்கும் இடம் தவிர மற்ற எல்லா இடங்களிலும் வ்யாபித்ததான என்றபடி. த்ரிகுண - ஸத்வம், ரஜஸ், தமஸ், என்கிற மூன்று குணங்களையுடைய ப்ரக்ருதியாகிற, ஸம்ஸாரகாந்தாரத்திலே - பாலைவனத்திலே, அநேக ஜந்ம ஸாஹஸ்ரியான - அனேகம் ஆயிரம் ஜன்மங்களை உடையதான. அநாவித - தகாததான, விஷய - சப்தம் முதலிய விஷயங்களாகிற, ம்ருகத்ருஷ்ணிகா - கானலை, ஆஸ்வாத - ஸாப்பிடுவதில், அநுபவிப்பதில் என்றபடி, லுப்தனாய் - ஆசையை உடையவனாய், அதாவது வெய்யில் காலத்தில் பெரிய பாலைவனங்களில் தூரத்தில் ஜலம் இருப்பது போல் தோன்றும், அதற்குக் கானல் என்று பெயர், அதில் தாகசாந்தி செய்துகொள்ள வேண்டும் என்கிற வீணான ஆசையை உடையவனாய் என்றபடி, அடிதெரியாதே - தான் வைக்கப்போகிற அடி எந்த இடத்தில் என்று தெரிந்துகொள்ளாமல், அன்றிக்கே காரணம் தெரியாமல் என்றாகவுமாம். இது ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் உபோத்காதாதிகாரத்தில் 'தட்டித்தாவற்று' என்றருளிச் செய்திருப்பதின் விவரணம். வாஸநா - சப்தாதி விஷயங்களை அநுபவிப்பதினால் உண்டாகிய வாஸனையாகிய, ரேணு - தூசிகளினால், குண்டிதனாய் - மறைக்கப்பட்ட ஜ்ஞானம் சக்தி முதலியவைகளை உடையவனாய். விபரீத - ஸ்வரூபத்திற்கு விருத்தமான, பரிச்ரம - ச்ரமத்தை, பலனாய் - பலமாக உடையவனாய். விச்ரமஸ்தாநம் - இளைப்பா

1. வராஹ புராணம். 2. கீதை-16-19.

3. நூறு தாமரைப் புஷ்பத்தினாலும், அதாவது அவைகளினால் ஆராதனம் செய்தாலும் பொறுக்கமாட்டேன். நூறு உபசாரங்களினாலும் பொறுக்கமாட்டேன்.

4. பாபிகளாகிய அவர்களை அஸுரர்களின் ஸ்வபாவமுடைய ஜாதிகளிலேயே பொழுதும் தள்ளுகிறேன்.

மும் பெறாதே கல்பாந்தகாளராத்ரிகள் வந்து முன்பு பரஸங்கல்ப ப்ரஸரதையான ப்ரஜ்ஞையிழந்து மூச்சடங்க ப்ரஸுப்தனாய், போகமோக்ஷாத்ய ப்ரவ்ருத்திகளுக்கு ப்ரஸங்கமில்லாதபடி கரண களேபரங்களையிழந்து 1 'லூநபக்ஷ இவாண்டஜா:' என்னும்படியாய், தனக்கு விசேஷித்தொரு பேரிடவொண்ணாதபடி மஹாதமஸ்ஸிலே இரும்புண்ட நீர் போல இறுகச் சுவறி, ஒரு மூலையிலே 2 'ஸம்ஹாரவிக்ஷேபஸஹஸ்ரகோடீஸ்திஷ்டந்தி ஜீவா:' என்னும்படி ஆயிரங்கோடி ப்ரஹ்மகல்பங்களடைப்புண்டு கிடக்கும்படிகளையும், மீண்டு பரமகாருணிகனுடைய ஸங்கல்பவிசேஷநியதகாலமும் வந்தால் 3 'ப்ரசரந்தி கேசந' என்னும்படி மஹதாதி வழியே போந்து பரமசேஷிபாத நிவேதநார்த்தமான விசித்ரதேஹ

றும் இடம். கல்பாந்த - ப்ரளயகாலங்களாகிற, காளராத்ரிகள் - பயங்கரமான ராத்திரிகள். முன்பு - முன் நடந்த ஸ்ருஷ்டி தசையில், பரஸங்கல்ப ப்ரஸரதையான - பகவானுடைய ஸங்கல்பத்தினால் பரவினதான, ப்ரஜ்ஞை - தர்மபூதஜ்ஞானத்தின் விகாஸம். ப்ரஸுப்தனாய் - தூங்கிக் கொண்டிருந்தவனாய். போகமோக்ஷாத்ய ப்ரவ்ருத்திகளுக்கு - ஸம்ஸாரத்தில் உண்டாகும் ஸுகதுக்கங்களை அனுபவித்தல், மோக்ஷமாகிற ப்ரயோஜனம், இவைகளை அடைவதற்குச்செய்யவேண்டிய கார்யங்களைச்செய்வதற்கு. கரண - இந்திரியங்கள். களேபரங்கள் - சரீரங்கள். லூநபக்ஷ இவாண்டஜா: - சப்பட்டைகள் அறுப்புண்ட பக்ஷிகளைப்போல. மஹாதமஸ்ஸிலே - ப்ரக்ருதிக்கும் ஸூக்ஷ்மாவஸ்தையான தமஸ் என்கிற த்ரவ்யத்திலே. இரும்புண்ட நீர்போல - நன்றாகக் காய்ச்சப்பட்ட இரும்பினால் இழுத்துக் கொள்ளப்பட்ட ஜலத்தைப்போல, இறுகச்சுவறி - தனித்தறிய வொண்ணாதபடி ஏகீபவித்து (ஒன்றாகி). ஸம்ஹார - ப்ரளயம், விக்ஷேப - ஸ்ருஷ்டி, இவைகளினுடைய, ஸஹஸ்ரகோடய: - ஆயிரம் கோடி காலங்கள், ஜீவா: - ஜீவாத்மாக்கள், திஷ்டந்தி - இருக்கிறார்கள். மீண்டு - மறுபடியும், ஸங்கல்ப விசேஷநியத - ஸங்கல்ப விசேஷத்தினால் ஏற்படுத்தப்பட்ட. கேசந - சில ஜீவாத்மாக்கள், ப்ரசரந்தி - வெளியில் ஸஞ்சரிக்கிறார்கள். மஹதாதி வழியே - மஹத், அஹங்காரம் முதலிய தத்வங்களின் வழியாக. 'பரமசேஷி' இத்யாதி - பரமசேஷியான பகவானுடைய ...வடிகளில் ஸமர்ப்பிப்பதற்காக ஏற்பட்ட விசித்ரங்களான சரீரங்களின்

1. ப்ராதர்நிர்வேதகாரிகை. 2. 3.

ஸம்பத்தியைப் பெற்றாலும் ஆக்கையின் வழியுழல்வேனென்று, நீ பகவத்கிங்கரன் என்றால் ஓமென்றிசையாதே யமகிங்கரர்க்கிடமாம்படி இந்த்ரியகிங்கரராய்ப் போந்த படிகளையும், தரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் பொழுது போக்க ப்ராப்தமாயிருக்க சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்தும் வென்றியே வேண்டி வீழ்பொருட்கிரங்கி வேற்கணார் கலவியே கருதி புலன் படிந்துண்ணும் போகமே பெருக்கிப் பொழுதினை வாளாப் போக்கின படிகளையும், பகவதநுபவவிச்லேஷாதிகளில் 1 'ஸா ஹாநி:' என்று இழவுபட்டு தஸ்யுபி: முஷிதனைப்போலே கூப்பிடவேண்டியிருக்க 2 "தாயொரு பக்கம்

சேர்க்கையை. ஆக்கையின் - சரீரத்தின், வழி - வழிகளிலே, அதுபோகும் வழிகளிலேயே என்றபடி, உழல்வேன் - உழன்றுகொண்டிருப்பேன். 'என்று' என்பதுமேல்'போந்தபடிகளையும்'என்பதுடன் அந்வயிக்கிறது. யமகிங்கரர்க்கு இடமாம்படி - யமகிங்கரர்கள் நம்மை ஆக்ரமிப்பதற்குப் பாத்திரமாகும்படி. தரித்து - மனதில் த்யானித்தும், எழுதி - புஸ்தகங்களில் எழுதியும், வாசித்தும், கேட்டும் - பிறர் வாசிக்கக் கேட்டும், வணங்கி - நமஸ்கரித்தும், வழிபட்டும் - ஸ்தோத்திராதிகளைச் செய்தும், பூசித்தும் - திருவாராதனங்களைச் செய்தும். இதற்கு எதிர் நடையாக நடத்தினபடியை நிரூபித்தருளுகிறார் - 'சூதினை' என்றாரம்பித்து. சூதினை - வஞ்சனையை, பெருக்கி - வ்ருத்தி செய்து, களவினை - அபஹாரத்தை, துணிந்து - தைர்யத்துடன் செய்து, சுரிகுழல் - சுருண்ட குழல்களையுடைய, மடந்தையர் திறத்து - ஸ்திரீகளின் விஷயத்தில், காதலே - ஆசையையே, மிகுத்தும் - அதிகமாக்கியும், வென்றியே-ஜயத்தையே, அதாவது பூஜ்யர்களான மாதா பிதா ஆசார்யர்கள் விஷயத்திலும் கூட தான் ஜயிக்கவேண்டும் என்பதையே, வேண்டி - ஆசைப்பட்டு, வீழ்பொருட்கு - நசிக்கக்கூடியதான ஐச்வர்யாதிகளுக்கு, இரங்கி - பிறர்களை யாசித்து, வேற்கணார் - வேல் ஆயுதம் போன்ற கண்களையுடைய ஸ்திரீகளின், கலவியே - ஸம்ச்லேஷத்தையே, கருதி - ஆசைப்பட்டு, புலன் - இந்திரியங்கள், படிந்து - அந்தந்த விஷயங்களிலேயே மக்னங்களாய் (முழுகி) இருந்து, உண்ணும் - அனுபவிக்கிற, போகமே - ஸுகத்தையே, விஷயங்களை அனுபவிப்பதினால் உண்டாகும் ஸுகங்களையே என்றபடி, பெருக்கி - வ்ருத்தி செய்து, பொழுதினை - காலத்தை, வாளா - வ்யர்த்தமாக. 'பகவத்' இத்யாதி - பகவானுடைய அனுபவத்திற்குப் பிரிவு வந்தால் அதாவது பகவதனுபவம் கிடைக்காவிடில் என்றபடி, ஸா ஹாநி: - அது நஷ்டம். இழவுபட்டு - நஷ்டமடைந்ததாக எண்ணி. தஸ்யுபி: - திருடர்களினால், முஷிதனைப்போலே

1. பாஞ்சராத்திரம். 2. பெரியாழ்வார் திருமொழி 4-8-9.

தந்தை யொரு பக்கம்' உதாஹ்ருதிகளிற்படியே அபாத்ரவிஷய விஶேஷத்தில் அலற்றும்படிகளையும், நிற்கின்றதெல்லா முடன்மிசை உயிரெனக் கரந்த நெடுமாலென்று ஓர்ந்து மித்ராமித்ர கதையற்று 'யச்சீல: ஸ்வாமீ' என்கிற ந்யாயத்தாலே ஸர்வபூதஸௌஹார்த்தாகை யுசிதமாயிருக்க அறப்பொருளை அறிந்தோராதே மறுக்கி வல்வலைப்

ஹரிக்கப்பட்டவனைப் போல, அதாவது எல்லாப் பொருளையும் அபஹரிக்கப் பட்டவனைப்போல. இங்கு 1 'யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே | ஸா ஹாநிஸ் தந்மஹச்சித்ரம் ஸா ப்ராந்தி: ஸா ச விக்ரியா || ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே | தஸ்யுபிர் முஷிதேநைவ யுக்தமாக்ரந்திதும் ப்ருஶம் ||' என்று சொல்லப்பட்டிருப்பது அநுஸந்திக்கத்தக்கது. தாயொருபக்கம் - ஒரு பக்கத்தில் தாயும், தந்தை - தகப்பனார், ஒருபக்கம் - ஒரு பக்கத்திலும், 'அலற்ற' என்று மேல் பதம். அபாத்ரவிஷய விஶேஷத்தில் - தனக்குத் தகாத விஷயங்களின் பிரிவுகளில், அலற்றும்படிகளையும் - கதறுகிற ப்ரகாரங்களையும். நிற்கின்றதெல்லாம் - இவ்வுலகத்தில் இருக்கிற ஸ்தாவர ஜங்கமமாகிய வஸ்துக்கள் எல்லாம், உடன்மிசை - ஶரீரத்தில் இருக்கிற, உயிர் - ஜீவாத்மா, என - என்று சொல்லும்படி, கரந்த - மறைந்துகொண்டிருக்கிற, நெடுமால் - ஶ்ரிய:பதி. ஓர்ந்து - யோசித்து, மித்ராமித்ரகதை - இவன் மித்ரன், இவன் ஶத்ரு என்கிற ப்ரஸ்தாபம், அற்று - இல்லாமல். 'யச்சீல:' இத்யாதி - 'தச்சீலோ தாஸ:' என்று மேல்பதம். அதாவது யஜமானன் எப்படிப்பட்ட ஸ்வபாவத்தை உடையவனாயிருக்கிறானோ, தாஸனும் அப்படிப்பட்ட ஸ்வபாவத்தை உடையவனாயிருக்கவேண்டும் என்றபடி. ஸர்வபூத ஸௌஹார்த்தாகை - எல்லா ப்ராணிகளுக்கும் நன்மையை விரும்பும் ஸ்வபாவத்தை உடையவனாயிருக்கை. இதற்கு எதிர்நடையான ஸ்வபாவத்தை நிரூபித்தருளுகிறார் - 'அறப்பொருளை' என்றாரம்பித்து. அறப்பொருளை - தர்மமாகிற புருஷார்த்தத்தை, அல்லது தர்மத்தினால் ஏற்படக் கூடிய ப்ரயோஜனத்தை, அறிந்து - தெரிந்துகொண்டு, ஓராதே - யோசிக்காமல், மறுக்கி - மறுகும்படி செய்து, அதாவது துக்கங்களை உண்டாக்கி, வல் -

1. ஒரு முகூர்த்தகாலமாவது ஒரு க்ஷணகாலமாவது பகவான் த்யானிக்கப்படவில்லை என்கிற எதுவோ அது நஷ்டம், அது பெரிய தோஷம், அதுவே ப்ரமம், அதுவே விகாரம், அதாவது ஒருக்ஷணகாலமாவது பகவானை த்யானம் செய்யாமை இவ்வளவு விதமான ரூபத்திற்குக் காரணம் என்று தாத்பர்யம், ஒரு முகூர்த்தமும் பகவானைப்பற்றிய த்யானம் இல்லாமல் தாண்டிப்போயிருக்கும்பொழுது திருடர்களினால் அபஹரிக்கப்பட்டவன்போல கதறவும் அழுகை உசிதம்.

படுத்திக் குமைத்திட்டுப் பல்லுயிரைக் கொன்றுண்ணும்படிகளையும், ஹரிரித்யக்ஷரத்வயத்தை அவஶமாகவாகிலும் உச்சரித்து பரமபத கமநத்துக்கு பரிகரபந்தம் பண்ணுகையே ப்ராஜ்ஞக்ருத்யமாயிருக்க 'ப்ரஹ்மகல்ப நியுதாநுபவத்திலு முண்டறுக்கவொண்ணாதபடி அக்ஷய்யமான அபசாரவர்க்கத்தை க்ஷணார்த்தந்தோறும் நடத்திப் போந்தபடிகளையும், முன் நடப்பைப் புரிந்து பார்த்து 1 'வாடினேன்வாடி', 2 'வாணிலாமுறுவல்', 3 'தாயே தந்தை' உதாஹ்ருதிகளில்படியே பஶ்சாத்தாபம் பிறந்து பழுதே பல பகலும்

த்ருடமான, அறுக்கமுடியாததான என்றபடி, வலைப்படுத்தி - நிர்ப்பந்தத்திற்குள்ளாகும்படி செய்து, குமைத்திட்டு - ஹிம்ஸித்து, பல்லுயிரை - அனேகம் ப்ராணிகளை, கோன்று - ஜீவஹிம்ஸை செய்து, உண்ணும் படிகளையும்- தான் ஸுகத்தை அனுபவிக்கும் ப்ரகாரங்களையும். ஹரிரித்யக்ஷரத்வயத்தை - ஹரி என்கிற இரண்டு அக்ஷரங்களையுடைய பதத்தை, அவஶமாக - தன் புத்தி பூர்வகமாகவல்லாமல் என்றபடி. பரிகரபந்தம் - எடுத்துக் கொண்டு போகவேண்டிய வஸ்துக்களை எடுத்துக்கொண்டு போகுதல், அதாவது மூட்டை கட்டுதல் என்றபடி. இங்கு 4 'ஸக்ருதுச்சரிதம் யேந ஹரிரித்யக்ஷரத்வயம் | பத்த: பரிகரஸ்தேந மோக்ஷாய கமநம் ப்ரதி ||' இத்யாதி அனுஸந்தேயம். ப்ராஜ்ஞக்ருத்யம் - புத்திமான் செய்யவேண்டிய கார்யம். 'ப்ரஹ்மகல்ப' இத்யாதி - ப்ரும்மாவின் கல்பங்களில் லக்ஷம் கல்பங்கள் அனுபவித்தாலும், உண்டறுக்கவொண்ணாதபடி - ஜீர்ணம் பண்ணிக்கொள்ள முடியாதபடி, அதாவது நிவ்ருத்தி செய்துகொள்ள முடியாதபடி. அக்ஷய்யமான - அழிவில்லாத பலத்தைக் கொடுக்கக் கூடியதான. 5 'ப்ரஹ்மகல்ப நியுதாநுபவேப்யநாஶ்யம் தத்கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே' என்னப்பட்டதிறே. க்ஷணார்த்தந்தோறும் - அரை க்ஷணம் அளவுள்ள காலம் தோறும். முன் நடப்பை - முன்னால் நடந்ததை, புரிந்து பார்த்து - திரும்பிப் பார்த்து. 'உதாஹ்ருதிகளில்படியே' என்றது என்றாரம்பிக்கும் திருமொழிகளில் சொல்லியிருக்கிறபடியே. பலபகலும் - அனேகம் தினங்களும், பழுதே - வ்யர்த்த

1. 2, 3, பெரிய திருமொழி-1-1-1; 1-6-1, 1-9-1.

4. எவனால் ஹரி: என்கிற இரண்டு எழுத்து ஒருதடவை சொல்லப்பட்டதோ அவனால் மோக்ஷத்தின் பொருட்டுப் போவதற்காக பரிகரங்கள் (ஸாதனங்கள்) கட்டப்பட்டன.

5. எந்தப் பாபமானது ப்ரும்மாவினுடைய ஒரு லக்ஷம் கல்பங்கள் அனுபவித்தாலும் நாசமடையாதோ அப்படிப்பட்ட பாபத்தை இந்த ஜந்து ஒரு க்ஷணத்தில் செய்கிறது.

போயினவென்று அஞ்சியழ ப்ராப்தமாயிருக்க ப்ரக்ருதிவேதாளீ வாரவஶனாய் 1 'காலமேதாவந்தம் ந வேத்வாநு' என்னும்படி கலங்கிக் கண்டவாறு திரிந்த படிகளையும் கண்டு, 2 'அஹோ மே மஹதீ யாதா நிஷ்பலா ஜந்மஸந்ததி:', 3 'யானே யென்னை யறியகிலாதே யானே யென்றனதே யென்றிருந்தேன்', 4 'நானே நானா வித நரகம் புகும் பாவஞ் செய்தேன்', 5 'அருநரகத்தழுந்தும் பயன் படைத்தேன்', 6 'ந ஸந்தி தாவந்தி ஜலாநி லோகே ஸிம்ஹோ ந ஹம்ஸவா பஹவோ மயாத்தா:'' இத்யாதி பரிதேவநங்களைப் பண்ணும்படி முன்பு ஸாத்விகஸம்பாஷணாதிகளாலே முகிழ்த்த நிர்வேதம்

மாகவே, போயின - சென்றன. அஞ்சி - பயந்து. ப்ரக்ருதிவேதாளீ-ப்ரக்ருதியாகிற பிசாசுக்கு. ஏதாவந்தம் காலம்-இவ்வளவு காலம், ந வேத்வாநு - அறியவில்லை. கண்டவாறு - கண்டபடியாக, அதாவது வாயால் இன்ன ப்ரகாரம் என்று சொல்லமுடியாதபடி. மே - எனக்கு, நிஷ்பலா - வ்யர்த்தங்களாக, மஹதீ - பெரியதான, ஜந்மஸந்ததி: - ஜன்மங்களின் பரம்பரை, யாதா - கழிந்தது, அஹோ - அந்தோ, இது மிகுந்த துக்கத்தைக் காண்பிக்கிறது. யானே - நானே, என்னை - என்னுடைய ஸ்வரூபம் முதலியவைகளை, அறியகிலாதே - தெரிந்து கொள்ளாமல், யானே - நானே எனக்கு ஶேஷீ, என்தனதே - இந்த வஸ்துக்களெல்லாம் என்னுடையதே, என்றிருந்தேன்-என்று எண்ணியிருந்தேன். நானே - நான் ஒருவனுமே, நானாவித நரகம்புகும்-அனேக விதங்களான நரகங்களில் ப்ரவேசிக்கும்படியான, பாவம் செய்தேன்-பாபங்களைச் செய்தேன். அருநரகத்து - ஒருவராலும் ப்ரவேசிக்கமுடியாத நரகத்தில், அழுந்தும் - சிரகாலம் மக்னனாய் இருக்குமதாகிய, பயன் - ப்ரயோஜனத்தை, படைத்தேன் - உண்டாக்கிக் கொண்டேன், அதற்குக் காரணங்களான பாபங்களைச்செய்தேன் என்றபடி. மயா - என்னால், ஸிம்ஹோ ந ஹம்ஸவா-ஸிம்மமாகி,சிங்கமாய் பிறந்துஎன்றபடி., பஹவ: அனேகம்ப்ராணிகள், அத்தா: - ஸாப்பிடப்பட்டன, (எவ்வளவு என்னில்:—) லோகே - இந்த லோகத்தில், தாவந்தி - அவ்வளவு, ஜலாநி - ஜலங்கள், ந ஸந்தி - இருக்கவில்லையோ (அவ்வளவு), அதாவது இந்தலோகத்தில் இருக்கும்ஜலங்களின் திவலைகளைக்கணக்கெண்ணினால் அவ்வளவுகணக்கு ஏற்படாது, அதாவது அவற்றைவிட அதிகமான ப்ராணிகள் ஹிம்ஸிக்கப்பட்டன என்றபடி. பரிதேவநம்-அழுகை. ஸாத்விகஸம்பாஷணம் - ஸாத்விகர்களோடு ஸம்பாஷித்தது. முகிழ்த்த - அரும்புபோல் உண்டான, அதாவது கொஞ்சமாய் உத்பவித்த என்றபடி. 'நமஸ்ஸு' இத்யாதி திருமந்திரத்தில் இருக்கும் 'நம:' என்னும்

1 ...ர-ஶாந்தி-312-30. 2. ப்ராதர் நிர்வேத காரிகை. 3. திருவாய்மொழி-2-9-9. 4 பெரிய திருமொழி-1-9-2. 5. பெரிய திருமொழி-6-3-4. 6.

நமஸ்ஸு நிஷேதச்ச நிரஸநத்தாலே முற்றி, செய்யாதன செய்யோம் நயவேன் பிறர்பொருளை நள்ளேன் கீழாரோடென்னும்படி செய்யேல் தீவினை யென்றருள்செய்யும் கையார் சக்கரக் கண்ணபிரான் ஆஜ்ஞாதி பண்ணாத வழிகளில் அவஶ்யமேயிலுமடியிட நடுங்கும்படியாம். மாத்ஸர்யாதிகளாலே நிர்வேதம் பிறக்குமாகில் அது மேலும் விபரீதவ்ருத்தங்களிலே கைவளரப் பண்ணும். அநாதி மாயா நித்ரையாலே உறங்கினவனுக்கு உணர்த்தியாலே நிர்வேதம் பிறந்தால் இது த்ருப்தாதிகளான ஆஸுரஸ்வபாவங்களை யடியறுத்து அமாநித்வாதிகளான ஆத்மகுணங்களோடே அபிநாஹித

பதத்தில் எனக்கு நான் ஶேஷியல்ல, எனக்கு மற்றொன்றையும் பற்ற ஸ்வாமித்வமுமில்லை, எனக்கு ஸ்வாதந்த்ர்யமுமில்லை, எனக்கு ஒரு வித பாபங்களும் இருக்கக் கூடாது என்றர்த்தம் ஏற்படும் பொழுது அந்த அர்த்தங்களினால் தடுக்கப்படுகிறவைகளை நிரூபித்துப் பார்த்ததினாலே. முற்றி - முதிர்ந்து, பரிபக்வமாய் என்றபடி. செய்யாதன-பெரியோர்கள் அனுஷ்டிக்காத கார்யங்களை, செய்யோம்-செய்யமாட்டோம். பிறர் - அயலாருடைய, பொருள் - வஸ்துக்களை, நயவேன்-ஆசைப்பட மாட்டேன், கீழாரோடு-தாழ்ந்தவரோடு, நள்ளேன்-ஸ்நேஹம் செய்யமாட்டேன், என்னும்படி - என்று சொல்லும்படி, தீவினை - பாபகர்மங்களை, செய்யேல் - செய்யாதே, என்று, அருள்செய்யும் - க்ருபை பண்ணுகிற, கையார் - கையில் நிறைந்திருக்கிற, சக்கர - சக்ரத்தை உடைய, கண்ணபிரான் - ஸ்ரீ க்ருஷ்ணனாய் அவதரித்து உபகாரகனானவன், ஆஜ்ஞாதிபண்ணாத - தன் ஆஜ்ஞா ரூபங்களான ஶாஸ்திரங்களில் இது செய்யத்தக்கது என்று அங்கீகரியாத. அடியிட - அடிவைக்க. இப்படித் திருமந்திராதிகளில் சொல்லுகிற ஸ்வரூபாதி விவேகத்தினால் உண்டான நிர்வேதமே பலபர்யந்தமாம் என்று நிரூபித்தருளுகிறார்—'மாத்ஸர்யாதி' என்றாரம்பித்து. மாத்ஸர்யம் - பொறாமை, அதாவது அயலானைப்பார்த்து அவன் செய்யக்கூடிய கார்யத்தைத் தானும் ஏன் செய்யக்கூடாது என்று பொறாமைப்பட்டு அப்படி இதுவரையில் தான் செய்து வாராததற்கு நிர்வேதப்படுதல். 'ஆதி' ஶப்தம் கோபம் முதலியவற்றைச் சொல்லுகிறது. வ்ருத்தங்களிலே - அனுஷ்டானங்களிலே. கைவளரப்பண்ணும் - கைவளர்ந்து போகும்படி பண்ணும், அதாவது அவைகளைச் செய்யும்படி பண்ணும். மாயா நித்ரையாலே - ப்ரக்ருதியாகிற மாயையினால் உண்டாக்கப்பட்ட நித்ரையினாலே, உணர்த்தி - விவேகம். த்ருப்தம் - கர்வம், ஆஸுரஸ்வபாவங்களை - அஸுரர்களுக்கு உண்டான ஸ்வபாவங்களை, அடியறுத்து - வேருடன் அறுத்து. அமாநித்வ கூடிய

அத்யவஸாய காரிணியாக்கும். ஆன பின்பு அக்ருத்யவ்யவஸாயியான அதந்த்ர ஸங்கோசத்திலு மாழங்கால்படாதே ஸர்வகார்ய ப்ரவஸாதகமான அதந்த்ர நிர்வேதத்திலு மிழியாதே ஸாத்விகவ்ருத்தியைக் கைப்பிடித்து நிஷித்தப்ரவாஹத்தை விலக்குகை நிஶ்சலவிவேகஜ நிர்வேதமும்.

வான்பட்ட மண்ணிருளின் மயங்குமாறு
மறித்தொருகாலெனை யூழிசென்றுலன்றோர்
ஊன்பட்டவுடலாழிவினையொழுக்கி
லொருகரையுங்காணாதே யொழுகுமாறும்
தேன்பட்டவிடம்போலத் தித்திக்கின்ற
சிறுபயனே யுறுபயனென்றருந்து மாறும்
தான்பட்டபடி யிக்கேர் தானே கண்டு
தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே தக்கவாறே.

இதி ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீ பரமபதஸோபாநே
। த்விதீயம் நிர்வேதபர்வ ।

186751

சென்னை-600 ...

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

களான-கர்வம் இல்லாமை முதலிய, அதாவது கீதையில் 'அமாநித்வம் அதம்பித்வம்' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டவைகள். அவிநாபூதமாய்-பிரியாததாய். 'அத்யவஸாய' இத்யாதி - மோக்ஷத்திற்கு உபாயமான கார்யத்தை அனுஷ்டிக்க அதிகாரியாகும்படி செய்யும். அக்ருத்யவ்யவஸாயியான - செய்யக்கூடாத கார்யத்தில் முடிவுபெறுகிற. ஆழங்கால்படாதே - முழுகிப் போகாதே. அத்யந்த ஸந்தோஷம் இருந்தால் அது அக்ருத்யகரணத்தில் மூட்டும் என்றபடி. ஸர்வகார்யப்ரவஸாதகமான - ஒரு கார்யத்திலும் ப்ரவேசிக்காதபடி மனதைக் குன்றும்படி செய்யக்கூடியதான. ஸாத்விகவ்ருத்தியை - ஸாத்விக சர்யத்தை, கைப்பிடித்து - அங்கீகரித்து, நிஷித்தப்ரவாஹத்தை - நிஷித்த கர்மங்களின் பரம்பரையை. 'நிஶ்சல' இத்யாதி - சலிக்காத விவேகத்தினால் உண்டாகிய நிர்வேதத்தின் ...ன்றபடி. ...யோஜனம்.

ஸ்ரீ:

ஓர் ஸந்தோஷ ஸமாசாரம்.

ஸ்ரீ. உப. வே. வித்வான் காடந்தேத்தி கோபாலாசார்யர் வேதாந்த தீபிகை 6-வது சஞ்சிகையில் பிரசுரம் செய்யப்பட்ட நமது ஸமூஹத்தின்துஸ்திதி என்னும் வியாஸத்தைப் படித்து மனமுருகி தமக்கு எவ்வளவு காரியமிருந்தும் அதைக் கவனிக்காமல் திருத்துறைப்பூண்டி என்னும் ஊருக்கு எழுந்தருளி சில உபந்யாஸங்களைச் செய்து அவ்வூரிலிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களனைவரையும் வேதாந்த தீபிகையை வாங்கும்படி ப்ரோத்ஸாகம் செய்ததில் நாலு ஸ்வாமிகள் சந்தாவை அனுப்பி மெம்பராகிவிட்டார்கள். இவ்விதம் ஒவ்வொரு ஊரிலும் ஒரு ஸ்வாமி ஏற்பட்டால் ஸபை நிரம்பவும் முன்னுக்கு வந்துவிடும்.

சாச்வத பண்டுக்கு உபகரித்த ஸ்வாமிகள்.

ஸ்ரீ உப. வி. எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார், தாராபுரம்	ரூ.	1—0—0
ஸ்ரீ உப. பி. நரஸிம்மாச்சாரியார், திண்டிவனம்	,,	1—0—0
ஸ்ரீ உப. செரூர் ஸ்ரீநிவாஸய்யங்கார், ஸ்ரீரங்கம்	,,	1—0—0
ஸ்ரீமான் நம்பெருமாள் நாயுடு, திண்டிவனம்	,,	1—0—0

ஹிந்து மதாபிமானச் சங்கம், நாகபட்டணம்.

இந்தச் சங்கத்தின் 34-வது வருஷத்திய கொண்டாட்டம் சென்ற சித்திரைமீ 16உ யன்று நாகை ஸப்ஜட்ஜ் அவர்கள் அக்ராஸனத்தின்கீழ் வெகு விமர்சையாக நடந்தது. இத்துடன் ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவமும் நடத்தப்பட்டது. சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்த்ரிகளால் வரவேற்பு வந்தனம் அளிக்கப்பட்டது. கொண்டைவாசல் வித்வான் ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்ய ஸ்வாமியால் 'பகவத்குணம்' என்னும் விஷயம் உபந்யஸிக்கப்பட்டது. பிறகு கல்விச் சங்கத்தை பற்றியும் அதன் வேத பாடசாலையின் அபிவ்ருத்தியைப்பற்றியும் அருமையான உபந்யாஸங்கள் நடந்தன. பிறகு ஸபை கலைந்தது.

ஸ்ரீ உபயவேதாந்த ப்ரவர்த்தக ஸபா.

இந்த ஸபையின் 24-வது வார்ஷிக மகோத்ஸவம் மேல்கோட்டை ஸம்ஸ்க்ருத காலேஜியில் வெகு விமர்சையுடன் சென்ற ஏப்ரல்மீ 28உ மகாவித்வான் ஸ்ரீ உப. வே. திருமலாசாரியர் ஸ்வாமி அக்ராஸனத்தின்கீழ் நடைபெற்றது. 24உ முதல் வித்யார்த்திகள் ஸ்ரீ உப. வே. தர்கதீர்த்த லக்ஷ்மி தாத்தாசாரியர் ஸ்வாமியாலும், கார்யதரிசிகளாலும் பரீக்ஷிக்கப்பட்டார்கள். பரிக்ஷைக்கு ஆஜராவதாக எழுதினவர்கள் 40. ஆஜரானவர்கள் 15, உபய வேதாந்த க்ரந்தங்களிலும் பரீக்ஷை நடந்தது. தேறினவர்கள் 15. திவ்யப்ரபந்தம் உத்தமகக்ஷியில் ஒருவரும், மத்யம கக்ஷியில் 3-பேர்களும், வேதத்தில் ஒருவரும், வேதாந்தத்தில் ஒருவரும், மற்றவர்கள் உபயவேதாந்தத்திலும் தேறினார்கள். தேறினவர்களுக்கு ஸம்பாவனை ரூ. 20 முதல் 50 வரைக்கும், இன்னும் அநேக புஸ்தகங்களும் கொடுக்கப்பட்டன. பிறகு வித்வான் வானமாமலை ஸ்ரீ உ. வே. ராமானுஜாசார்ய ஸ்வாமி, மஹாவித்வான் பண்டிதரத்னம் லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, வித்வான் ஸ்ரீ உ. வே. வெங்கடாசார்ய ஸ்வாமி, அக்ராஸனாதிபதி இவர்களால் மிகவும் அருமையான உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. பிறகு ஸபை முடிவுபெற்றது. அநேக வைதிக லௌகிக ப்ரமுகர்கள் ஸபைக்கு விஜயம் செய்திருந்தார்கள்.

ஜூன் மீ த்திய பஞ்சாங்கம்.

ஜூன் மீ 3உ வைகாசி மீ 21உ புதன், ஏகாதசி, 11-6, சித்திரை 34-36. ஏகாதசி.

,, 5உ ,, 23உ வெள்ளி, திரயோதசி 57-13, விசாகம் 32-33 வைகாசி விசாகம், காஞ்சி வரதராஜர் கருடஸேவை, நம்மாழ்வார் திருநக்ஷத்திரம்.

,, 6உ ,, 24உ சனி, சதுர்தசி 0-37 பௌர்ணமி 54-50, பட்டர் திருநக்ஷத்திரம்.

,, 14உ ஆனி மீ 1உ ஞாயிறு, அஷ்டமி 11-57 பூரட்டாதி 0-40, உத்திரட்டாதி 58-45, கிரீஷ்மருது, மிதுனமாஸம், ஆனிமாஸப்பிறப்பு, தர்ப்பணம்.

,, 17உ ,, 4உ புதன், ஏகாதசி 6-29, அச்வனி 0-19, ஏகாதசி.

,, 20உ ,, 7உ சனிக்கிழமை, சதுர்தசி 12-9 ரோஹிணி 10-52 அமாவாஸ்யை தர்ப்பணம்.

ஜூலை மீ 1உ ஆனி மீ 18உ புதன், தசமி 37-51 ஸ்வாதி 33-38 பெரியாழ்வார் திருநக்ஷத்திரம்.

,, 2உ ,, 19உ வியாழன், ஏகாதசி 34-20 விசாகம் 51-44 ஏகாதசி.

,, 3உ ,, 20உ வெள்ளி, துவாதசி 24-51 அனுஷம் 45-42 ஸ்ரீமந் நாதமுனிகள் திருநக்ஷத்திரம்.

ஒரு துக்ககரமான செய்தி.

நிகழும் வைகாசி மீ 5உ திங்கட்கிழமை ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி ஸ்ரீ முஷ்ணம் க்ருஷ்ணமாசார்யார் ஸ்வாமி மதுராந்தகத்தில் ஆசார்யன் திருவடிகளை அடைந்ததாக ஸமாசாரம் நமக்குக் கிடைத்தது. இந்த ஸ்வாமி ஸ்ரீ முஷ்ணம் திருநாராயணாசார்யரிடம் தர்க்க சாஸ்திரமும், பிள்ளைபாகம் ஸ்ரீ அழகியசிங்கரிடம் வேதாந்த சாஸ்திரமும், காலக்ஷேபம் செய்து வரிஷ்டராய் ஸ்ரீ முஷ்ணத்திலும், மதுராந்தகத்திலும் எழுந்தருளியிருந்துகொண்டு தன்னிடம் வந்து ஆச்ரயித்தவர்களுக்கு காலக்ஷேபாதிகள் ஸாதித்து ஸித்தாந்த ப்ரவசனம் செய்துகொண்டிருந்தார். நமது ஸபைக்கு அடிக்கடி எழுந்தருளி உபகாரம் செய்துவரும் ஸ்ரீ உ.வ. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர் ஸ்வாமி இந்த ஸ்வாமியின் சிஷ்யரே. அந்த ஸ்வாமியும் இன்னும் அவருடைய ஸதீர்த்யர்களும் சேர்ந்து தங்கள் ஆசார்யன் கைங்கர்யத்தை விசேஷித்துச் செய்யவேண்டுமென்று ப்ரயத்தனம் செய்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம்.

இந்த ஸ்வாமியினுடைய வியோகத்தினால் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்திற்கு ஒரு விசேஷ நஷ்டம் ஏற்பட்டுவிட்டது.

கோ. ஸ்ரீ.
உதவி கார்யதர்சி.